ஒளிநகல் சிற்றிதழ்
குருத்து 2 | ஓலை 2

இளசாக, மிருதுவாக, மென்மையாக...

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்



“அழுக்குப் பாதங்களுக்காகவே
அந்தப் பள்ளிகளும்,
அநேக கல்லூரிகளும்,
தொண்டு நிறுவனங்களும்
துவங்கப்பட்டன. அழுக்குப்
பாதங்களைத்தான் நீங்களும்
நானும் கழுவ வேண்டும்.”



# பொறுப்பாசிரியர் பக்கம்

அன்பு வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம்.

குருத்தோலை மீண்டும் வரத்தொடங்கி இருப்பது பலருக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கிறது. அதில் ஒருவராக நீங்கள் இருப்பதினால்தான் இதோ இதை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மகிழ்ச்சி எங்கள் மகிழ்ச்சி. உங்களுக்கு இன்னும் அதிக மகிழ்ச்சி அளிக்கும் செய்தி ஒன்றும் இருக்கிறது. நமது குருத்தோலை இதழ் இணையத்தில் வலம்வரத் தொடங்கிவிட்டது. www.kurutholai.com என்கிற இணைய பக்கத்தில் முதல் இரண்டு பதிப்புகளில் வெளிவந்த படைப்புகள் அனைத்தும் பதிவேற்றப்பட்டுவிட்டன. வரும்நாட்களில் மற்ற படைப்புகளும் பதிவேற்றப்படும். வாசகர்கள் வாசித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பற்ற தன்மையினால் வரும் விளைவுகளைப் பார்த்து மனம் வேதனைப்படுகிறது. கடந்த மாதத்தில் நடந்த இரண்டு சம்பவங்கள் மனதை மிகவும் வேதனைப்படுத்தின. விளம்பரத் தட்டி ஒன்று விலை மதிப்பற்ற ஒரு உயிரை காவு வாங்கி இருக்கிறது. விளம்பரத் தட்டி வைத்தவரைப் பிடிக்க போலீஸ் படைகள் அமைப்பதும், அவரை பிடிக்கமுடியாமல் தவிப்பதும் வேடிக்கையாக இருக்கிறது. பொதுமக்கள் போலீசை கலாய்க்கிறார்களா, இல்லை போலீஸ் பொதுமக்களை கலாய்க்கிறதா? யாரை யார் கலாய்க்கிறார்கள் என்றே தெரியவில்லை.

ஊட்டி மலைப்பகுதியில் கிறிஸ்தவ கைப்பிரதிகளை வினியோகம் செய்துகொண்டிருந்த தம்பதிகளை வேறு மதத்தை சேர்ந்த நபர்கள் சிலர் வலுக்கட்டாயமாக அவர்களின் மத அடையாளத்தை அணியச்செய்த சம்பவமும், அதைத் தொடர்ந்து நடந்த அனைத்தும் பைத்தியக்காரத்தன ரகம். முதலாவது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பச் சென்றவருக்கு அதை எதற்காக செய்கிறோம் என்றே தெரியவில்லை. தான் அதைச் சட்டத்திற்கு உட்பட்டே செய்கிறேன் என்பதைச் சொல்லவும் தெரியவில்லை. விஷமிகள் சிலர் இடும்பு பண்ணும்போது அதை உறுதியாக மறுக்கும் தன்மையும் இல்லை. வேண்டுமானால் நீங்கள் செய்துவிட்டுப் போங்கள் என்று சொல்லும் பக்குவமும் இல்லை. நீங்கள் இதைச்செய்ய கட்டாயப்படுத்துவது இந்திய நாட்டுச் சட்டத்துக்குப் புறம்பானது என வாதிடவும் தெரியவில்லை. “வாங்க பேசுவோம். நீங்க சொல்றத நான் கேட்கிறேன், நான் சொல்றத நீங்க கேளுங்க” என்று நட்பு ரீதியாக அழைக்கவும் தெரியவில்லை. பார்க்க பரிதாபமாக இருந்தது. அடுத்த நாள் கிறிஸ்தவர்கள் சிலர் கூட்டம் சேர்ந்துகொண்டு வீம்புக்கு அதே இடத்தில் கைப்பிரதிகளை வினியோகித்து வீடியோ எடுத்துப் போட்டது பைத்தியக்காரத்தனத்தின் உச்சம். என்றைக்குத்தான் பொறுப்பு வருமோ தெரியவில்லை.

குருத்தோலையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று, புதிய தலைமுறை எழுத்தாளர்களையும் வாசிப்பாளர்களையும் உருவாக்குவது. நீங்கள் ஒரு புதிய எழுத்தாளரா? உங்கள் எழுத்துக்கள் உங்கள் தனிப்பட்ட முகநூல் கணக்கைத் தாண்டி மற்றவர்களும் வாசிக்க வேண்டும் என்கிற விருப்பம் உடையவரா? உங்களுடைய படைப்புகளைத் தாராளமாக அனுப்பலாம். kurutholaimag@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் மின் இதழிலும் இணைய பக்கத்திலும் வெளியாகும். தெரிந்தெடுக்கப்படவில்லை என்றாலும் வருந்த வேண்டாம். உங்கள் படைப்புகளை எப்படி மெருகேற்றுவது என்கிற ஆலோசனை கொடுக்கப்படும். நீங்கள் உங்களையும் உங்கள் படைப்புகளையும் மெருகேற்றிக் கொள்ளலாம். கண்டிப்பாக ஒரு நாள் உங்கள் படைப்பும் வெளிவரும்.

இளைய தலைமுறையை வாசிக்க வைப்பதுதான் எல்லாருக்கும் சவாலான விஷயமாக இருக்கிறது. நீங்கள் பெற்றோர் என்றால், உங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் வாசிக்கத் தெரியும் என்றால், இந்த இதழையும் கொஞ்சம் வாசிக்கச் சொல்லுங்களேன். நீங்கள் ஒரு ஆசிரியர் என்றால் சிரமம் பார்க்காமல் ஒரு பிரிண்ட் எடுத்து உங்கள் பள்ளியின் நூலகத்தில் வைக்கலாமே. நீங்கள் யாராக இருந்தாலும் நீங்கள் மனது வைத்தால் கண்டிப்பாக உங்களால் வேறு சிலரையும் வாசிக்க வைக்க முடியும். WhatsApp ல் Forward பண்ண மறக்க வேண்டாம்.

அடுத்த மாதம் சந்திப்போம்.

அன்புடன், ஜெஸ்டின்.



கார்த்திகா ராஜ்குமார்

# மாறிப் போனவைகள் – 2

ஐந்தாவது படிக்கிற மகன்கள் முடி வெட்டுவது பற்றி தீர்மானிக்கிற உரிமை அப்பாக்களுக்கு மட்டுமே என்று நாற்பது வருடங்களுக்கு முன்பாக இருந்திருக்க வேண்டும். அப்பா என்னைக் கூட்டிக்கொண்டு போய் சலூனில் விடுவார்.

உதகையில் பிரதான சாலையில் இருந்தது அது. என்னைவிட உயரமான அந்த சலூன் நாற்காலியில் அப்பாவின் நண்பர் கே.ஆர். நாயர் என் கை பிடித்து ஏற்றி உட்கார வைப்பார். “நான் பார்த்துக்கறேன் சாரே. நீங்க வேலையை முடிச்சிட்டு வாங்க” என்று லக்ஸ் வாசம் வீசும் ஒரு மாபெரும் வெள்ளைத்துணியில் என் தலை மட்டும் தெரியும்படியாக போர்த்தி, போடுகிற முடிச்சு என் கழுத்தை இறுக்காதபடி ஊதுபத்தி வாசனை வீசும் தன் நீண்ட விரலினால் கழுத்தைச் சுற்றி துளாவிவிட்டு எங்களைப் பார்த்து புன்னகைப்பார்.

அப்பா போய்விட காத்திருக்க வேண்டிய நேரம் எனக்குப் பழகிப் போனதொன்று... எதிரே இருக்கிற குட்டிகுரா பவுடர், சிறிய வாழைப்பழ அளவில் இருக்கிற படிகாரம், செவனோ க்ளாக் பிளேடுகள், நீர் கலந்த மோர்போல பாட்டிலில் இருக்கும் வினோத வாசனைத் தண்ணீர் எல்லாம் பார்த்து சலித்து, மறுபடியுமாக எதிர் கண்ணாடியில் தெரியும் இந்திய தேசபக்தி படங்களை, நேதாஜியை, பட்டேலை மற்றும் தலைவர்களைத் தரிசித்து முடியும்பொழுது நாயர் வெண் சட்டை வெண் வேஷ்டியுடன் ஒரு தலைமை ஆசிரியர் தொனியில், “நேரமாயிடுச்சா தம்பி” என்று கனத்த குரலில் கேட்டுவிட்டு, “உனக்கு புடிச்ச மாதிரி வெட்டிடலாம்” என்பார். இது ஒரு தொழில்முறைப் பொய் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. அரை இஞ்சுக்கு மேல் முடி இருக்கக் கூடாது என்று சொல்லும் அப்பாவின் வார்த்தைகளை இம்மி

பிசகாமல் செய்பவர் அவர். நானோ தலை வெட்டக் காத்திருக்கும் ஆட்டின் முகபாவத்தில் தலையை ஆட்டுவேன். எது எனக்கு வளருமோ வளராதோ தலை முடியும், நகங்களும் அபாரமாய் வளரும். ஒரு செழித்த சுதந்திரமான புதர்ச் செடிபோல் தலை மேல் கவிழ்ந்திருந்து, இதோ சடுதியில் வெட்டப்பட்டு கீழ் விழப்போகும் முடிக்கற்றைகளை ஏக்கமாய் என் பின்னிருக்கும் கண்ணாடியில் பார்த்திருப்பேன்.

நாயர் என் தலை முடிக்குள் எதையோ தேடுவதுபோல தன் விரல்களால் அலசி பின் கண்டறிந்த பாவனையில் “குட்டிப் பையா கோவமானும்? ஒனக்கு ரெட்டைச் சுழி. அதனால் கவனமாயிட்டுண்டு வெட்டணும். மனசிலாச்சோ” என்பார் ரகசியமான குரலில் வேறு யாரும் கேட்டுவிடக் கூடாது என்கிற மாதிரி. கையறு நிலையில் முகத்தை இன்னும் இறுக்கிக் கொள்வேன். வெட்டுவது கூட பிரச்சினை இல்லை. கத்தரிக்கோலால் கடகடவென்று வெட்டி விடலாம்தான் என்று சுலபமாக மனதில் தோணும். ஆனால் நாயரோ ஏதோ தங்கக் கத்தரிக்கோலை பயன்படுத்துவதுபோல மிக பவ்யமாய் எடுத்து, சோதனை செய்வதைப்போல மிக மெதுவாக அசைத்துப் பார்த்துவிட்டு, தலையைச் சுற்றி ஒரு பறவை பறப்பதுபோல அவர் கையின் கத்தரி கடகடவென்று அசையும். பறவை இரையைப் பார்த்ததும் சட்டென்று இறங்கி கவ்வி எடுப்பதைப்போல என் தலை முடிக்குள் இறங்கி, வாயில் ஒரு கற்றையுடன் மேலேறி, அதை அந்த என் வெள்ளைப் போர்வை மேல் உதிர்க்கும். வெண்ணிறமாய் இருந்தது கருப்பு வெள்ளையுமுமான புது டிசைன்கள்



உருவாகிக்கொண்டே இருப்பது இந்தச் சோகத்திலும் சற்று பிடித்த விஷயம்.

சுவரின் சில்லு சிதிலங்களில் முகங்கள், உருவங்கள் பார்த்து பழகின மனதுக்கு விதவித உருவங்கள் நகர்ந்து நெளியும் என்னைச் சுற்றிலும். ஒரு சித்திரக்காரன் உட்கார்ந்து கொண்டு துணியில் கருப்பு பென்சிலில் தீட்டுவதாக மயங்கிக் கொண்டிருக்க, நாயர் அந்த மோனத்தைக் கலைப்பதைப்போல என் கன்னத்தைத் தட்டி “குட்டிப் பையனுக்கு ஒறக்கமோ” என்று போத்தியிருந்த துணியை அவிழ்த்து படார் படாரென்று உதறி, அதன் ஓவியத்தீற்றல்களைத் தரைக்குப் பரிசளித்துவிட்டு, மறுபடியுமாய் எனக்குப் போர்த்தி, தன் புன்னகையை மீண்டும் என்மேல் நழுவவிடுவார்.

“சாரே வந்திடும். இன்னும் சில நிமிஷம், அவ்வளவுதான். சரியா?”



என்பார். பயத்தில் தெரிகிற என் முகம் அப்பாவின் தாமதத்தினால் அல்ல. நாயர் எடுக்கிற ட்ரிம்மரால்தான் என்பது அவருக்குப் புரியவே புரியாது. நாயர் முடி வெட்டுகிறதில் நான் மிகவும் பயப்படுவது இதற்குத்தான். டிரிம்மரை எடுத்து, அதை கரக் கரக்கென்று அழுத்திக்கொண்டு என் தலை மீது நகர்த்திக் கொண்டிருப்பார். ஆயிரம் தேனீக்கள், பூச்சிகளை அதற்குள் நிரப்பினதைப்போல, ஒரு அதீத சப்தங்கள் தலை எங்கும் நகர்ந்து நகர்ந்து போக, நிமிஷங்கள் நீண்டு கொண்டே போக, கண்களை இறுக மூடிக்கொள்வதைத் தவிர வேறு எதுவும் தோணினதே இல்லை. அதுவும் ஒரு தருணத்தில் சில்லிட்ட அவர் விரல்கள் என் காது மடலை மூட, காதிற்குப் பின்பாக அது நகரும்போது வரும் நடுக்கம் எல்லா முறையும் வெளிப்பட, "அஞ்ச வேண்டாம் குட்டி" என்பார். ஒரு வழியாக அது முடிந்ததும் உச்ச கட்டம் போல வில்லனின் முகபாவத்தில் ஒரு பிளேடை உடைத்து சவரக் கத்தி ஒன்றில் செருகி, "பையா அசைய வேண்டா புரியுதோ?" என்று நெருங்கினதும் என்னால் நடுக்கத்தை அடக்க சிரமப்பட வேண்டியதாயிருந்தது. இன்னும் கண்களை மூடிக்கொள்ள பின் கழுத்திலும் காதருகிலும் அவர் சரக் சரக்கிட, அந்தக் கருக் கருக் நிமிடங்கள் ஒரு வழியாக முடிந்ததும், " முடிஞ்சது குட்டிப் பையா" என்று அறிவித்து, படிகாரத்தை எடுத்து கழுத்து எல்லாம் ஜில்லென்று தடவி, நான் சமாளிப்பதற்குள் குட்டிகுரா பவுடர் கொட்டி, கழுத்தில் அப்பி எடுத்து, "எப்பிடி ஜோரா இருக்கே பார் பையா" என போர்வையிலிருந்து விடுதலை செய்து விட சரியாக வருவார் அப்பா. நிமிர்ந்து கண்ணாடியில் பார்க்கும்போது, முடி தலை வழிய இருந்த முகம் தொலைந்து போனதுபோல மொட்டையாக எங்கோ, என்றோ பார்த்த என் முகம் நிலைக் கண்ணாடியில் தெரிய, அப்பா முன் அழுவதற்குத் தோணாமல் மௌனமாய் அவர் கை பிடித்தபடி நடந்திருக்கிறேன்.

இப்போதோ தலை நிறைய ததும்பும் முடி வழிய நிற்கும் குட்டி இளவரசிக்கு, கடும் வெயிலை முன்னிட்டு முடி வெட்டுவதென்று சபையில் ஏகமாய்த் தீர்மானம் நிறைவேற்றி அவளிடம் சொல்ல, முடியவே முடியாதென்று அவள் சொல்ல, அவள் அப்பாவும் தன் வீட்டோவைப் பயன்படுத்தி அவளுக்கு ஆதரவு தர....

**காலங்கள் மாறிவிட்டது**
**எத்தனையோ விதமாக...**



# கதை நல்லது – 2

மைக்யெல்

குடிக்கறதுக்கு கஞ்சி இல்ல. இதுல கத ஒண்ணுதான் கொறைச்சல் என்று சிலர் சொல்லலாம். "கத கேக்குற நாய செருப்பால அடி" என்று ஒரு சொல் வழக்கு உண்டு. கதையின் சிறப்பைப் புரிந்து கொள்ளாதவர்களின் பேச்சு அது.

மனிதன் வாழ சாப்பாடுதான் முக்கியம். கதை இல்லாவிட்டால் மனிதன் செத்துப் போய்விட மாட்டான் என்பது உண்மைதான் என்றாலும், மனிதன் என்பவன், உடல், மனம், உணர்ச்சி, ஆன்மா என்ற பகுதிகளால் ஆனவன். சாப்பாடு என்பது அடிப்படைத் தேவைதான். சாப்பாடு உடலுக்கு, மனதுக்கும், ஆன்மாவுக்கும் உணவு தேவை. இந்த உணவு இல்லை என்றால், ஆன்மாவும், மனமும் வறுமையில் தவிக்கும். சாப்பாடு மட்டும் சாப்பிட்டுவிட்டு இருக்கும் மனிதன் மிருகம் போன்றவன்தானே! மனிதனுக்கு மட்டுமே இருக்கும் திறமைகளும் ரசனைகளும் பிறருடன் பகிர்ந்து கொள்ளப்படும்போது பகிர்பவருக்கும் பெறுபவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இது தான் கதை போன்ற பல கலைகளுக்குக் காரணமாக இருக்கின்றது.

கதைகளில் கலாச்சாரமும் மனித வாழ்க்கை முறையும் கலந்திருக்கின்றன. அந்தக் காலத்து ராஜாக்களின் வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்பது நமக்குக் கதைகள் மூலமாகத்தான் தெரிகிறது. பழங் காலத்துத் திரைப்படங்கள் அந்தக் காலத்து வாழ்க்கை முறையை நமக்குக் காட்டுகின் றன. இன்றைய கதைகள் வருங்காலத்துக்கு வரலாறு கற்றுக் கொடுக்கும். ஏனென்றால் கதை என்பது கற்பனையாக இருந்தாலும், மனித வாழ்வின் நிகழ்வுகளும் உண்மை களும் அதில் கலந்திருக்கின்றன.



என்னதான் கஷ்டப்பட்டு சிந்தித்தாலும், உண்மை உலகத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு உடையவைகளாகத் தான் கதைகள் இருக்கின்றன. உண்மை உலகத்தில் இருப்பதைவிட தலைகீழான நிலையைக் கதைகளில் உருவாக்குபவர் களும் உண்டு. ஆனாலும் அவை உண்மை யின் பிறழ்வு அல்லது தலைகீழ்த் தன்மை என்றுதான் நம்மால் புரிந்து கொள்ளப்படுகிறது.

உதாரணமாக, காக்கையும் நரியும், மிருகங்களும் பேசுவதில்லை. ஆனால் நாம் கதையைப் படிக்கும்போதே, அந்தக் கதை நடக்கும் உலகத்தில் இதுதான் விதி என்று நம்பத் துவங்கிவிடுகிறோம். வாசித்து முடித்த பின், அதில் நமக்குக் கிடைத்த மகிழ்ச்சியையும் பாடத்தையும் மனதில் பதித்து வைத்துக் கொள்கிறோம். கதைகள் நல்ல ஒழுக்கத்தைப் பற்றி மக்களுக்குச் சொல்லவும், சில அறிவுரை களையும், வாழ்வின் பாடங்களைக் கற்றுக் கொள்ளவும்தான் துவக்கத்தில் பயன்படுத்தப் பட்டன. இந்தப் பாடங்கள் சுவாரசியமாக இருந்தால்தான் மக்கள் விரும்பிக் கேட்பார்கள் என்பதற்காக அவற்றில் பலவித கலகலப்பான அம்சங்கள் இணைக்கப் பட்டன. ஆனால் இந்தக் காலத்தில், கலகலப்பு மட்டும் போதும், கருத்துகள் வேண்டாம் என்று சொல்கிற பெரிய கூட்டம் உருவாகிவிட்டது. ஆகவே அவர்களுக்கு ஏற்ப கதைகளும் மாறத் துவங்கிவிட்டன. விளைவு, சிரித்து முடித்த உடனேயே மறந்து போகும் கதைகள். வலுவில்லாத கதைகள். அதிக வாழ்நாள் இல்லாத ஈசல் கதைகள்.

இன்றும் கூட சிறப்பான கதைகள் நல்ல கருத்துகளைத் தாங்கி வரத்தான் செய்கின்றன. அவற்றுக்கு வாழ்நாளும் அதிகமாக இருப்பதைப் பார்க்கிறோம். அந்தக் காலத்துக் கதைகள் பல இன்னும் உபயோகத்தில் உள்ளன. திரும்பத்திரும்ப வேறு வேறு நிறங்களை ஏற்று வலம் வந்து



கொண்டுதான் இருக்கின்றன. ஏனென்றால், மனித மனதிற்குள், மனசாட்சிக்குள், நன்மை–தீமை, விருப்பம்–வெறுப்பு போன்ற எண்ணங்கள் இயற்கையாகவே இருக்கின் றன. அவற்றைக் கதைகள் ஊக்கப்படுத்து கின்றன. கதைகள் சோறு ஊட்டுவதற்கு மட்டுமல்ல, ஒழுக்கத்தை ஊட்டவும்தான். இதை நாம் புரிந்து கொண்டால் கதைகளை இன்னும் அதிகமாகப் பயன்படுத்துவோம். இதோ எனக்குப் பிடித்தமான ஒரு குறுங்கதை:

ஒரு குளத்தில் மூன்று மீன்கள் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தன. முதல் மீன் அதிக புத்தியுள்ளது. பிரச்சனைகளில் இருந்து வெளியே வருவது எப்படி என்பதை அறிந்திருந்தது இரண்டாவது மீன். மாற்றத்தை விரும்பாத, பிடிவாதமான ஒன்றாக மூன்றாவது மீன் இருந்தது.

நாளைக்கு வந்து இந்தக் குளத்தில் மீன் பிடிக்க வேண்டும் என்று ஒரு மீனவன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டது முதலாம் மீன். ஆபத்தை உணர்ந்து கொண்டு, மற்ற மீன்களிடமும் இந்தக் குளத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று எச்சரிக்கை கொடுத்தது.

இரண்டாவது மீன் சொன்னது, “நான் இங்கேயே இருக்கப் போறேன், பிடிபட்டா எப்படியாவது தப்பிச்சுக்குவேன்.“ மூன்றாவது மீன், “நான் எங்கேயும் போக மாட்டேன். இங்கேயேதான் இருக்கப் போறேன். பிடிபடணும்னா பிடிபட்டுத்தானே ஆகணும்?” என்றது.

முதல் மீனும் சில மீன்களும் வேறு குளத்துக்குப் போய்விட்டன. அடுத்த நாள் மீனவன் வந்தபோது மற்ற இரண்டு மீன்களும் பிடிபட்டன. இரண்டாம் மீன் செத்ததுபோல நடித்து தப்பியது. மூன்றாம் மீன் ஒன்றும் செய்யாமல் இருந்து செத்துப் போனது.

**கருத்து : எப்போதுமே நாம் மாற்றத்தை எதிர்பார்த்து, அதற்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆபத்து வருகிறது என்று உணரும்போது உடனடியாக செயல்பட வேண்டும்.**



**சுட்டி 1:** நான் மன்டே பிறந்தேன், நீ..!??

**சுட்டி 2:** நான் சன்டே பிறந்தேன்..

**சுட்டி 1:** புழுவாதடீ, சன்டே லீவு தான...!!



ஜாண் செல்வராஜ்

# மனைவி என்றொரு பூவுலக ஸ்வர்க்கம்

காலை ஐந்தரைக்கு மனைவியின் அலாரம் ஒலித்தது. உள்ளறையிலிருந்து எழுந்து ஓடி அந்த அலாரத்தை ஆஃப் செய்தேன்.

எழ முயன்ற மனைவியின் செவிகளில் ஒரு தென்றல் மோதுவதைப்போல மெல்லச் சொன்னேன். "தூங்கு பெண்ணே... உனக்கான இனிய நித்திரை இன்னும் மிச்சமுள்ளது".

ஒரு நிலவு தனது இருப்பிடத்திற்குத் திரும்புதல்போல எனது இல்லாள் சுகமான உறக்கத்திற்குள் மிதந்து சென்றாள்...

கதவை நிதானமாய்த் திறந்தேன்... அதன் கீச் சப்தம் எனது மனைவியைத் தொல்லை செய்து விடக் கூடாதே.... அந்தப் பூவின் நித்திரை கலைந்து விடக் கூடாதே...

வாசலில் ஒரு வசந்த காலம் இறைந்து கிடப்பதுபோல தினமலர் பரவிக் கிடந்தது.... பிறந்த குழந்தையைப் பெண் மருத்துவர் ஆசையாய்த் தூக்குதல்போல செய்தித்தாளை எடுத்து வீட்டிற்குள் நுழைந்து ப.சிதம்பரம் சிறையில் கஞ்சி குடித்து, கட்டிலில் தூக்கம் வராமல் புரண்டு படுத்து, வெஸ்டர்ன் கழிப்பறையில் அமர்ந்து தேம்பியழுத செய்தியை வாசிக்கையில் "பாலு! வாங்கிக்கங்கம்மா! பாலு" என்ற தண்ணீரில் பால் கலக்கும் தயாள பால்காரரின் ஓசை...

கிச்சன் நுழைந்து, பாத்திரத்தை எடுத்து, வாசல் தாண்டி "அரை லிட்டர்" என்றேன்... ஒரு கார்காலம் பூமி மீது மழைத் துளிகளை ஊற்றி விடுவதுபோல பாலை ஊற்றுகிறார்... அவரை நன்றியுடன் நோக்குகிறேன்... எல்லையில் காவல் செய்யும் கார்கில் வீரனுக்கொப்பானது இவர் தியாகம்... எந்த மழையிலும் பனியிலும் புயலிலும் பால் தரும் ஈர மனசுக்காரர்.

சமையலறை எனக்கான திகைப்புகளால் நிறைந்து கிடந்தது... பாலைச் சிறிது மிச்சம் வைத்து விட்டு மற்றுமொரு கிண்ணத்தில் நிரப்பினேன்... தேயிலைத் துகளைத் தேடினேன்... தொலைந்த குழந்தையை நெரிசலான பூங்காவில் தேடியலையும் தாயாக அந்தத் தேயிலையைத் தேடுகிறேன்... ஆங்கோர் நெகிழி போத்தலில் அது அடைபட்டிருக்கக் கண்டேன்.

எடுத்து அணைத்துக் கொண்டேன். கேஸ் ஸ்டவ்விற்குள் பதுங்கியிருந்த அக்கினி ஜுவாலைகளுக்கு விடுதலை தந்து எரிய விட்டேன். அதன் மேல் பால் கிண்ணம்...

இஞ்சியைத் தேடி குளிர்சாதனப் பெட்டிக்குள் நுழைந்து மீண்டேன்... சிறு துண்டு காணக் கிடைத்தது. எனது மனைவி

தயாரிக்கிற தேநீருக்குத் தனிச்சுவை தரும் இந்த இஞ்சித் துண்டுகள்...

ஒரு பூரிக்கட்டையை எடுத்து, அதன் நுனிப்பகுதியால் இஞ்சியைத் தட்டி துகள்கள் ஆக்குகிறேன்... இடிந்த கட்டிடத்திற்குள்ளே சிதைந்து கிடக்கும் மனித உருவங்களாக இஞ்சி இறந்து கிடந்தது...

பால் கொதிக்கிறது... தேயிலையை உத்தேசமாய்க் கொட்டுகிறேன்... எனது மனைவியின்மேல் வைத்திருக்கிற காதலுக்கு எத்தனை கரண்டி தேயிலைத் துகள் கொட்டினால் அவருக்குப் பிடிக்கும் என்கிற சூட்சமம் தெரிந்தே உள்ளது...

தேயிலை பாலுடன் கலக்கிறது... தமிழிசை கவர்னர் ஆனதும் அவரது அப்பா குமரி ஆனந்தன் சிரித்ததுபோல அந்தப் பாத்திரத்துப் பால் தேயிலையுடன் இணைந்து சிரிப்பின் விநோத சந்தங்களை எழுப்பிக் கொண்டிருந்தது... கர்நாடகாவிற்கு மூன்று துணை முதல்வர்களைத் தெரிவு செய்து அனுப்பிய அண்ணன் அமித்ஷா போல் தேயிலை பால் கூட்டணிக்குள் இஞ்சியைத் திணிக்கிறேன்... வட்ட பௌர்ணமியின் வடிவம் மிச்ச நாட்களில் மாறி விடுவதுபோல தேநீரின் வர்ணம் மாறி விடுவதை எனது விழிகள் விரியக் கவனித்தேன்.

கைக்கெட்டிய தூரத்து முதல்வர் பதவி கடைசிவரை கிடைக்காமல் போகுமோ எனக் கொதிக்கிற மு.க.ஸ்டாலின் இதயம்போல அந்தத் தேநீர் கொதிக்கிறது... நுரை பொங்கி மேலே வருகிறது... பாத்திரம் தாண்டி வரப்பார்க்கும் அந்தத் திரவத்தை ஹாங்காங் போராட்டக்காரர்களைத் தடி கொண்டு அடித்து அடக்க நினைத்த சீன போலிஸார்போல அடக்க முயல்கிறேன். நெருப்பைக் குறைக்கிறேன்... எழும்பிய தேநீர் வேகம் குறைந்து உள்ளே போகிறது... அடங்கி விடுகிறது...

திருமண வைபவத்தின் தாலி கட்டும் காட்சியில் பூக்களை வீசும் பார்வையாளன்போல இறுதியாக சிறிது ஜீனியை தூவி விடுகிறேன்... வறண்ட வாழ்க்கைக்கு வர்ணம் பூசும் காலம் கடந்து கிடக்கிற கவன்மெண்ட் வேலையாய் அந்த வெள்ளை சீனி தேநீருடன் கலந்து சங்கமம்.

நாம் போட்ட டீ எப்படி இருக்கிறதோ என்று தான் முதன்முதலில் எடுத்த புகைப்படத்தை பிரிண்ட் செய்து பார்க்கிற போட்டோகிராஃபர் போல தேநீரைச் சுவைக்கிறேன்... அந்தத் துளிகள் உலகின் மொத்த ருசியையும் தனக்குள் ஒளித்து வைத்திருப்பதை அறிந்து பயங்கர வியப்பு எனக்குள் படர்கிறது...

நாமா இத்தனைச் சுவையான தேநீர் செய்தோம் என்று எனக்குள் எழுந்த கர்வத்தை, அடே! உன் மனைவி மீது நீ கொண்ட நேசமே இந்தத் தேநீருக்கான சுவையாய் பரிணமித்துள்ளது என்று சொல்லி அடக்குகிறது ஞானம்....

ஒரு சிறு டம்ளருக்குள் அந்தத் தேநீரின் சுவையைப் பதுக்கி வைத்து எடுத்துச் செல்கிறேன்... ஒரு மாபெரும் பாலத்தை இரண்டு கடல்களுக்கு நடுவே கட்டிய பொறியாளனின் ஆனந்தம் எனக்குள்...

மனைவி இன்னும் தூக்கத்தின் பிடியில் கைதியாய் இருக்க, அவரது சிறை யிருப்பைத் திருப்புகிறேன்...

“என்னஙக”

“இந்தா டீ... உனக்காக நான் எனது அத்தனை திறமைகளையும் கொட்டி உருவாக்கிய டீ”

மெல்லப் பருகுகிறார்... அவரது விழிகள் வானத்தை விடவும் அகலமாய்த் திறக்கின்றன...

“நீங்க போட்டதா? சூப்பர்!”

நான் பிறந்ததன் பயனை அக்கணத்தில் அடைந்ததாய் உணர்ந்து நின்றேன்...

மனைவியை நேசிப்பவர்கள் உலகின் உச்சபட்ச சந்தோஷக்காரர்கள் என்பதை அறிந்து கிறங்கிப்போய் சுவர்மேல் சாய்ந்தேன்.

# வெகுஜன அரசியலில் கிறிஸ்தவ இளைஞர்கள்




✍ டேவிதன்

கிறிஸ்தவ இளைஞர்கள் அரசியலில் ஈடுபட திருச்சபை அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்கள் என்று கருதப்படுவது மக்கள் மன்றம் (பாராளுமன்றம் மற்றும் சட்டசபை), நிர்வாகம் (அரசுத்துறை), நீதித்துறை, மற்றும் பத்திரிக்கை. ஆனால், கிறிஸ்தவ மதிப்பீடுகளை (Christian Values) இங்கு கொண்டு செல்வதற்குப் போதுமான அளவு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு இந்த நான்கு துறைகளிலுமே இல்லை என்பது கசப்பான உண்மை.

இதைக்குறித்த விழிப்புணர்வு கிறிஸ்தவர்களுக்கும் இல்லை, திருச்சபை தலைவர்களுக்கும் இல்லை. தென்னிந்திய திருச்சபை நினைத்தால் ஒரே இரவில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அகடமி ஆரம்பிக்கக்கூடிய கட்டமைப்புகள் இருக்கின்றன. ஆனால், ஏனோ இதுவரை அதைக்குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களின் தோல்விக்கு காரணம் அதன் தலைவர்கள் ஊழியம் செய்வது மட்டுமே கடவுள் பணி, மற்றவை எல்லாம் உலகப்பிரகாரமான பணி என்று, ஆவிக்குரியது, உலகப்பிரகாரமானது (Sacred and Secular) என்ற தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்தி விட்டார்கள். ஊழியத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை மற்றப் பணிகளுக்குக் கொடுக்காமல் போனதே இந்தப் பின்னடைவுக்குக் காரணம். இப்போதாவது ஆரம்பித்தால் இனி வரும் நாட்களில் அரசுத்துறைகளில் கிறிஸ்தவ மதிப்பீடுகளின் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இயேசுவின் போதனைகளான அன்பு, தியாகம், உண்மை, நீதி, பரிசுத்தம், தாழ்மை, எளிமை, சேவை, இவையெல்லாம் இன்றைய அரசியலில் பிரதிபலிப்பதில்லை. காரணம், கிறிஸ்தவ மதிப்பீடுகளை இந்த நான்கு துறைகளிலும் கொண்டு செல்ல தவறிவிட்டோம். இன்று அரசு நடுத்தர மற்றும் ஏழை மக்களை சொல்லொண்ணா துயரங்களில் ஆழ்த்துகிறது. ஆனால், கோடீஸ்வர முதலாளிகளுக்குப் பல சலுகைகளை வாரி வழங்குகிறது. கிறிஸ்தவ வேதம் முழுவதும் கடவுள் ஏழைகளுக்கான கடவுளாகவே தன்னை வெளிப்படுத்துகிறார். இதை அரசியலில் எடுத்துச் சொல்ல ஆளில்லை.

### அரசியல் பாவமல்ல

அரசியல் சாக்கடை ; அதில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டால் நம்மை அசிங்கப்படுத்திக் கொள்ள நேரிடும் என்று வாதிடுவது அர்த்தமற்றது. அரசியல் எப்போது சாக்கடையானது? காமராஜர், கக்கன், ஜீவா போன்ற தலைவர்கள் அரசியலில் கறைபடாமல் இருந்தார்களே! அவர்களால் இருந்திருக்கமுடிகிறபோது பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்ற கிறிஸ்தவர்கள் உண்மை, நீதியோடு அரசியலில் ஈடுபடமுடியாதா? நாம் முதலாவதாக அதை விட்டு ஒதுங்கி விட்டோம்.

# கிறிஸ்தவ அரசியல் தலைவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு திருச்சபைக்கு உண்டு.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அரசியல் தலைவர்களுக்காக ஜெபிப்பதோடு நின்றுவிடுகிறார்கள். கிறிஸ்தவத் தலைவர்கள் நல்ல அரசியல் தலைவர்களை உருவாக்கும் பணியைத் துவக்க வேண்டும். நாம் வெறும் ஆத்துமாவைப் பரலோகம் சேர்க்கும் வேலையை மட்டும் பார்க்காமல் இந்த உலகத்தில் இருக்கும்போது அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதையும் போதிக்க வேண்டும். நாம் கிறிஸ்தவ இளைஞர்களைச் சரியாக வழிநடத்தத் தவறியதால், அவர்கள் ஏற்கனவே இருக்கும் சாக்கடை அரசியலில் சேர்ந்து, பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்ற பழமொழிக்கேற்ப மாறிவிடுகிறார்கள்.

### கிறிஸ்தவ இளைஞர்களை எப்படிப் பயிற்றுவிப்பது?

சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், பெண்கள் ஊழியம் போன்ற பல நிகழ்ச்சிகள் சபையில் நடப்பதுபோல சமூகப்பணிக்கும் நமது கிறிஸ்தவ வாலிபர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். குறிப்பாக, அரசு பல நலத்திட்டங்களை அறிவிக்கிறது. அதை மக்களிடம் கொண்டு சேர்க்க அல்லது தேவையான மக்களுக்கு அந்த உதவிகள் கிடைக்க நமது வாலிபர்கள் அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். உதாரணமாக, முதியோர் பென்ஷன், கர்ப்பிணி பெண்களுக்குப் பேறுகால உதவித் திட்டம், விதவைப் பெண்களுக்கு உதவித் திட்டம், இரண்டு பெண் குழந்தைகள் உள்ள பெற்றோருக்கு உதவித் திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு நல உதவிகள், பிறகு ரேஷன் கார்டு, ஆதார் கார்டு, பான் கார்டு வாங்கித் தருவது, வீடு எரிந்தால் உதவி பெற்றுத் தருவது, விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு வாங்கித் தருவது, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தருவது, பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், வருமான சான்றிதழ் போன்ற பல தேவைகளுக்கு மக்கள் தரகர்களையே நம்புகிறார்கள். அவர்கள் அதிகமான கமிஷன் பெற்று இந்த உதவிகளைச் செய்கிறார்கள். சில நேரங்களில் பணம் பெற்றுவிட்டு செய்யாமலும் இருக்கிறார்கள்.

நமது சபை வாலிபர்களை, தனியாகவோ, அல்லது குழுவாகவோ ஏற்படுத்தி சபையைச் சுற்றியுள்ள மக்களுக்குச் சாதி, மதம் பேதம் இல்லாமல் அனைவருக்கும் கட்டணம் இல்லாமலோ அல்லது மிகக்குறைந்த கட்டணத்திலோ இந்த உதவிகளைப் பெற்றுத் தரலாம். மக்களிடம் பணம் பெறாமல் இலவச சேவையாக அல்லது வாலிபர்களின் தேவைகளைச் சபை சந்தித்தால், இலவசமாக இந்த உதவிகளைப் பெற்றுத் தந்தால், மக்கள் வாலிபர்களைப் பற்றி நல்ல செய்தியைப் பரப்ப ஆரம்பிப்பார்கள். மக்களுக்கு அவர்களைப் பிடித்துவிட்டால் அவர்களே வாலிபர்களைக் குறித்து நல்ல அபிப்பிராயங்களை மற்றவர்களிடம் சொல்லுவார்கள். குறைந்தது 10 வருட சேவைக்குப் பிறகு மக்கள் மத்தியில் வாலிபர்களில் ஒருவரை கவுன்சிலர் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்காமல் தனித்து நிற்க சொல்லலாம். படிப்படியாக சட்டமன்றம், பாராளுமன்றம் போன்ற தேர்தலில் நிற்கலாம்.

தமிழ்நாட்டில் அனைத்துத் திருச்சபையிலும் இப்படி இயக்கங்கள் ஆரம்பித்துவிட்டால் எதிர்காலத்தில் நல்ல அரசியல் தலைவர்களை உருவாக்க முடியும். இப்படி பொது சேவையில் ஈடுபடுகிற வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் குடி, போதை, இல்லாமலும், சேவை என்ற அர்ப்பணிப்புடனும் செயல்பட அவ்வப்போது அவர்களுக்குப் போதனை கொடுக்கப்பட வேண்டும்.



# பறந்த மனசும், பறந்த ஐந்து ரூபாயும்...

(உண்மை நிகழ்விலிருந்து பிறந்த சிறுகதை)

ஜேக்கப் ஜெபராஜ்

நான்கு பெரிய ரோடுகளின் சந்திப்பு அது. அருகில் ஓர் இரயில் தண்டவாளம்.

ஆட்சிமாற்றம் எப்போது ஏற்படுமோ என்ற ஏக்கத்தில், தூக்கத்தை இழந்து தவித்து துடிக்கும் தமிழக மக்களைப்போல...

எப்போது சிக்னல் பச்சைக்கொடி காட்டுமோ, பாயலாம் என்ற நிலையில் ஆவலோடு காத்து நிற்கும் வாகன ஓட்டிகளில் ஒருவரிடம் ...

சீவி முடிந்திராத தலை முடி,

சுருங்கி வெளுத்துப்போன மங்கலான உடை,

இடுப்பில் ஒரு 6 அல்லது 7 மாத குழந்தை,

கையில் ஒரு அலுமினிய டப்பா கொண்ட ஒரு இளம்பெண் வந்து, குழந்தையைக் காட்டி பிச்சை கேட்க...

சட்டென தனது பேன்ட் பாக்கெட்டில் கை விட்ட அந்நபர், ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை அந்த டப்பாவில் போட முன்வந்தபோதுதான் அந்த அதிர்ச்சி சம்பவம் நடந்தது!

யாரும் எதிர்பார்க்கவில்லை அதை...

குழந்தையுடன் நின்றிருந்த பெண், திடீரென தன் கையை நீட்டி ஓங்கி அந்த காசைத் தட்டிவிட...

ஆறு வாகனங்களைக் கடந்து, சுமார் 20 அடிகள் தள்ளிப் பறந்து போய் விழுந்தது அந்தக் காசு.

சுற்றுமுள்ள எல்லோரும் அதிர்ந்து போய் நடப்பதறியாது திகைத்துக்கொண்டிருந்தபோது, கூச்சலிட்ட குரலில் சத்தமிட்டபடி பேச ஆரம்பித்தாள் அந்தப் பெண்!

“என்னை என்ன பிச்சக்காரி’னு நினைச்சியா? அவ்ளோ கேவலமா என்னை நினைச்சி அஞ்சி ரூபா குடுக்குற ...

என் இடுப்புல இருக்குற குழந்தையை பத்திரமா பாத்துக்கிறதுக்கு, இந்த குழந்தைய பெத்தவங்க எனக்கு தர்ற மாச சம்பளமே 2000 தெரிஞ்சுக்கோ.

இன்னைக்கு எனக்கு சம்பள நாள். இதோட அம்மா அப்பா ரெண்டு பேரும் நல்லா சம்பாதிக்கிறாங்க ...

இந்த சிக்னலுக்கு பக்கத்துல இருக்குற பாடி TVS நகர்’ல தான் இருக்காங்க. தேவையில்ல உன் அஞ்சி ரூபா.”

அந்த ஐந்து ரூபாயைப் பறிகொடுத்தவனாய், (அப்போதைக்கு 5 ரூபாய் பெரிய காசாச்சே) அத்தனை பேர் நடுவில் தர்மம் செய்யப்போய், தர்ம சங்கடமான நிலையில் சிக்கிய அந்த நபர் வேறு யாருமல்ல...

நானே தான்.

அப்புறமென்ன...

சிக்னலைக் கவனித்தேன், வேகமாக இடத்தைக் காலி செய் என்றது பச்சை விளக்கு.



# எட்டதில் கட்டது

பெண்களை
நிலவென
வர்ணித்தவன்
நன்கறிவான்..
ஆழ்ந்து
ஆழத்தை
ஆராய்ந்தால்,
விசையின்றி
திசை மாறி
சிக்கலில்
சிக்கி
சிக்னலின்றி
தொலைந்தே
போவான்
என்பதை..



# கல்யாணமாம் கல்யாணம்

ஜெஸ்வின்

## ஆயிரம் காலத்துப் பயிர்

திருமணம் வாழ்க்கையின் ஒரு நாள் நிகழ்வு அல்ல, வாழ்நாளின் மிக முக்கியமான ஒரு தெரிவு. நம்மால் தெரிந்தெடுக்க முடியாத பல நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிறம், முகம், இனம், மொழி, பெற்றோர் என நாம் தெரிந்தெடுக்க முடியாதவைகள் ஏராளம். அதே நேரத்தில் இவ்வுலக வாழ்வில் நாம் கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டியவைகளும் ஏராளம். படிப்பு, நண்பர்கள், வேலை, வாழ்க்கைத் துணை போன்றவை முக்கியமான தேர்வுகளில் சில. மதன் கார்க்கி எழுதியதுபோல "கருவுக்குள் பூக்கும் ஒற்றைத் துடிப்போடு தொடங்கும், கர்வங்கள் அடங்கும் ஒற்றைத் துடிப்போடு அடங்கும்". வாழ்க்கை ஒரு தனிமனிதனின் இவ்வுலக வாழ்க்கையாக இருக்கலாம். ஆனால், திருமணம் "ஆயிரம் காலத்துப் பயிர்". எனவேதான் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது மிக முக்கியமான தெரிவு.

தற்போதைய சூழலில் பிள்ளைகள் தானாக வளர்கிறார்கள். வளர்க்கப்படுவது இல்லை. பிள்ளைகளுக்கு உணவளிப்பதே பெற்றோரின் பிரதான கடமையாகப் பார்க்கப்படுகிறது. பிள்ளைகளுக்கு வயிறார உணவும், தேவைப்படும் ஆசைப்படும் பொருட்களை வாங்கியும் கொடுத்து விட்டால் போதும். பெற்ற கடன் தீர்த்தாகி விட்டது. படிப்பு அது பள்ளியின் வேலை. பக்தி அது பாஸ்டரின் வேலை. கை நிறைய காசை வாங்கிக்கொண்டு பள்ளியும் பாஸ்டருமாவது அக்கறையுடன் செயல் படுகிறார்களா என்று பார்த்தால் "எனக் கென்ன, அது உன் பாடு" கதைதான். நடுத்தெருவில் நிற்பது பிள்ளைகள்.

நாம் சிறு வயதில் இருந்தே தெரிந்தெடுக்க துவங்குகிறோம். மிகச் சிறிய வயதில் இருந்தே. பால் வேண்டும் என அழ ஆரம்பிப்பதிலிருந்தே என்றாலும், சிறுவயது தெரிந்தெடுப்புகள் அனைத்தும் பெரும்பாலும் சுயத்தை அடிப்படையாகக் கொண்டது. சிறுபிள்ளைகள் தங்களைப் பற்றி மட்டுமே சிந்திப்பார்கள். "எனக்கு வேண்டும்" என்பதே அவர்களின் தெரிந்தெடுப்பின் அடிப்படை. அது நல்லதா கெட்டதா என்பது பற்றியெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. எதற்காக எனக்கு வேண்டும்? ஏனென்றால் "எனக்குப் பிடித்திருக்கிறது." இதைத் தாண்டி சிறுவர்களின் சிந்தனை போவது இல்லை.

வருந்தத்தக்க விதத்தில் பல வாலிபர்களும் பெரியவர்களும் கூட இதே அடிப்படையிலேயே தெரிந்தெடுப்பை நிகழ்த்துகிறார்கள். காரணம் பலருக்கு அவர்களின் தெரிந்தெடுப்பு அவர்களை மட்டுமல்ல, அவர்களைச் சார்ந்த மற்றவர்கள் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்கிற அறிவும் அக்கறையும் இல்லாமல் இருப்பதுதான். எனக்கு வேண்டும், ஏனென்றால் எனக்குப் பிடித்திருக்கிறது.

சிறு வயதிலேயே உடை அணிவதன் நோக்கமும் உடையை எப்படித் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். பதின்ம வயதில் நண்பர்களை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். எல்லோரும் நண்பர்கள் அல்ல. இளம் வாலிபப் பிராயத்தில் தன் படிப்பைத் தெரிந்தெடுக்க கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். வாலிபர்கள் தங்களுக்கான வேலையையும் வாழ்க்கைத் துணையை யும் தெரிந்தெடுக்க கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

நமது கலாச்சாரத்தில் திருமணம் வரை நாம் எதையுமே தெரிந்தெடுக்க விடுவதில்லை. இந்தத் தொல்லைபேசியைக் கண்டுபிடித்தாலும் பிடித்தார்கள், பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்குப் பிறகும் விடுவதில்லை. இப்படி வளர்ந்த தம்பதிகள் தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்ப்பார்கள்? சிந்திக்கவே தெரியாத ஒரு பெருங்கூட்டம் உருவாகிக் கிடப்பதற்கான காரணம் புரிகிறதா?

தனி நபர்களின் தெரிந்தெடுப்பின் அவசியமும், அந்தத் தெரிந்தெடுப்பு தன்னை சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் பாதிக்கும் என்பதையும் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

திருமண தெரிந்தெடுப்பில் இன்னும் அதிகக் கவனம் தேவை. காரணம் என்ன தெரியுமா? திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். எப்படி எனது முன்னோர் எடுத்த முடிவு என்னுள் தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறதோ, அதைப்போல என்னுடைய இந்த ஒற்றை முடிவு எனது ஆயிரம் தலைமுறைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

“ஆத்தீ! அப்பனும் கருப்பு ஆத்தாவும் கருப்பு, பிள்ள மட்டும் வெள்ளையா பொறந்துருக்கே!” என்று விஷமத்தை



பதின்ம வயதில் நண்பர்களை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். எல்லோரும் நண்பர்கள் அல்ல.

> “அந்த ஆதாமின் DNA எனக்குள்ளும் இருக்கிறது என்பதற்கு இதைவிட என்ன உதாரணம் வேண்டும்?”



கக்கிவிட்டுப்போன கிழவிகளுக்குத் தெரிந் திருக்க வாய்ப்பில்லை, அதற்குக் காரணம் பத்துத் தலைமுறைக்கு முன்னால் உள்ள DNA என்று. மனித DNA மூலக்கூறின் ஆராய்ச்சிகள் ஆச்சரியப்படத்தக்க பல தகவல் களைக் கொடுக்கின்றன. இங்கிலாந்தில் வசிக்கும் வெள்ளையர் ஒருவரின் DNA வில் கருப்பு ஆப்ரிக்கரின் குறிப்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. ஏதோ ஒரு காலத்தில் அவரது குடும்பத்தில் ஆப்ரிக்காவில் திருமண சம்பந்தம் இருந்திருக்கலாம். விடாது கருப்பு.

பரம்பரை வியாதிகள் என்று பெரிய லிஸ்டே இருக்கிறது. மருத்துவரிடம் போனால் உங்கள் மூன்றாவது தலைமுறை முன்னோர் வரைக்கும் கணக்கு கேட்பார்.

தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை. அப்பனுக்கு புள்ள தப்பாம பொறந் துருக்கு. தமிழ்ச் சொல்லாடல்கள் எத்தனை அர்த்தம் மிகுந்தவைகள்.

நமது தீர்மானங்கள் பரம்பரை பரம்பரையாக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கான ஆகச்சிறந்த உதாரணம் மனிதனின் பாவ நிலை. ஏதேன் தோட்டத்தில் ஒரு தம்பதிகள் எடுத்த ஒரு தவறான முடிவு, பல்லாயிரம் வருடங்கள் கடந்து இன்று உலகத்தில் பிறக்கும் குழந்தையையும் கறைபடுத்துகிறதே. இதை உணர்ந்ததினால் அல்லவா “நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்” என்று தாவீது புலம்பினார். “இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமா யிருக்கிறது” என்பது எரேமியா தீர்க்கனின் வாதம். மீன் குஞ்சுக்கு நீந்த கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. மனிதக் குட்டிக்குத் தவறு செய்ய கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. அந்த ஆதாமின் DNA எனக்குள்ளும் இருக்கிறது என்பதற்கு இதைவிட என்ன உதாரணம் வேண்டும்?

பாருங்கள், திருமணம் எவ்வளவு முக்கியமான ஒரு தீர்மானம்! வாழ்க்கைத் துணை எவ்வளவு கவனமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்! அந்தத் தெரிந்தெடுப்புக்கு அடுத்தடுத்த கட்டுரைகள் உதவி செய்யும்.

கடுகு

# தமிழ் கிறிஸ்தவ குறும்படத் திருவிழா

நாள்

**21, டிசம்பர் 2019**

Call
**+91 97917 62788**

குறும்படங்களை சமர்ப்பிக்கவேண்டிய கடைசி நாள்

**15 நவம்பர் 2019**

## முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளுங்கள்...

1. குறும்படம் கிறிஸ்துவின் பிறப்பு எவ்வாறு ஜாதி, மத, கலாச்சார வேறுபாடு இன்றி எல்லாருக்கும் நற்செய்தியாக இருக்கிறது என்ற கருத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் சமூக வலைதளங்களில் அனைத்து மதத்தவரும் கண்டு புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்
2. அனைத்து குறும்படங்களும் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும்.
3. அனைத்து குறும்படங்களும் 2 நிமிடங்கள் முதல் 15 நிமிடங்களுக்குள்ளாக இருக்க வேண்டும்.
4. கீழ்க்கண்ட பிரிவுகளில் குறும்படங்களுக்கான பரிசுத் தொகை குழுத்தலைவரிடம் கொடுக்கப்படும்.

   சிறந்த குறும்படம் | இரண்டாவது சிறந்த குறும்படம் | சிறந்த இயக்கம் | சிறந்த ஒளிப்பதிவு | சிறந்த படத்தொகுப்பு
   சிறந்த நடிப்பு (ஆண்) | சிறந்த நடிப்பு (பெண்) | சிறந்த இசை / ஒலிக்கலவை
5. நீங்கள் பங்கேற்பதை http://www.yaway.org/kadugu-registration/ என்ற வலைதளத்தில் உங்கள் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸப் எண்ணைக் கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம். அதன் பின்னர் உங்கள் குறும்படத்தை உருவாக்கலாம். நுழைவுக் கட்டணம் ரூ 100 மட்டும் நுழைவுப்படிவம் அனுப்பும் போது செலுத்த வேண்டும்.
6. குறும்படங்களை கிறிஸ்தவ ஊடகத்துறையில் இருக்கும் தொழில் நுட்ப வல்லுனர்கள் மதிப்பிடுவார்கள். அவர்களது தீர்ப்பே இறுதியானது.

பின்னணி இசை, பாடல்கள் (இருந்தால்) மற்றும் பிற படங்கள் அல்லது காணொளிகள் அனைத்துமே குழுவினரது சொந்த படைப்பாக இருக்க வேண்டும். கதைக்குத் தேவையான சில படங்களோ, பாடல்களோ, ஓவியங்களோ பின்னணியில் இடம்பெற்றால் அவை copyleft ஆக இருக்க வேண்டும், அல்லது அவற்றுக்கான உரிமையாளர்களிடம் அனுமதி பெறப்பட்டு இணைக்கப்பட வேண்டும். சில பொருட்களின் தலைப்புகள், விளம்பர வசனங்கள் போன்றவற்றை அனுமதி இல்லாமல் பயன்படுத்துவதும் கூடாது.

முழு நிபந்தனைகளை தெரிந்துகொள்ள... /kadugu2019 /kadugu_event /kaduguevent kadugu2019@gmail.com



# எல்லா இருதயங்களையும் அறிந்தவர்

✍ பென்னி அலெக்ஸாண்டர்

கேய்ர்ஸீ மனநிலைத்தேர்வு (Keirsey temperament test) என்று அமெரிக்காவில் பிரபலமான ஒரு ஆன்லைன் தேர்வு உண்டு. பேட் கேய்ர்ஸீ மற்றும் அவரது மகன் டேவிட் கேய்ர்ஸீயால் நடத்தப் படும் பிரபல நிறுவனம். இது மனிதர்களின் குணாதியங்களை 4 வகையாகப் பிரிக்க உதவும் ஒரு நுட்பமான சைக்கோமெட்ரிக் டெஸ்ட். இந்தத் தேர்வின் இறுதியில் நமக்குப் பொருத்தமான வேலை, மற்றும் வேலைக்குப் பொருத்தமான ஆள், ஒரு குழுவின் மற்ற நபர்களுடன் இவர் பொருந்திப் போவாரா என்றெல்லாம் வகைப்படுத்த முடியும்.

இந்தத் தேர்வில் ஏராளமான கேள்விகள் (எனக்கு நினைவில் இருந்து 150) உங்களைப் பற்றித் தொடர்ச்சியாகக் கேட்கப்படும். எவ்வளவு நேரமானாலும் எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் ஒரு கேள்விக்கு வேண்டுமென்றே மாற்றித் தவறான தகவலைப் பதிலாகத் தந்தாலும் பல கேள்விகளுக்குப் பின்பு முற்றிலும் வேறு வகையில் கேட்கப்படும் அதே கேள்விக்கு நீங்கள் வைக்கும் பதிலால், நீங்கள் முன்பு பொய் சொன்னதை சாஃப்ட்வேர் அறிந்து கொள்ளும். அறிவியல்பூர்வமான இத்தேர்வு பலவகையான வேலைக்கு ஆள் எடுக்கும் பல நிறுவனங்களால் நம்பகத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதை, சுமார் 19 வருடங்களுக்குமுன் புரோகிராம் செய்யும் வாய்ப்பு எனக்கு திரு. டேவிட்டுடன் இணைந்து செய்யக் கிடைத்தது. அச்சமயம், பின்னால் உள்ள மிகச் சிக்கலான லாஜிக்குகளைக் கண்டு வியக்க நேரிட்டது. தந்தையும் தனயனும் மிகச்சிறப்பான முறையில் பல யுக்திகளைக் கையாண்டு அவற்றை அல்காரிதம்களாக(algorithms) உருவாக்கியிருந்தனர்.

நான் வேண்டுமென்றே பலமுறை பலவாறாகப் பதிலளிக்க முயற்சி செய்தாலும் என் குணாதிசயம் (temperament sort) மற்றும் நிலைப்புத்தன்மை (Consistency) என்ன என்பதை ஒவ்வொறு முறையும் சரியாக இந்த சாஃப்ட்வேர் எளிதில் கண்டறிந்து காட்டிக் கொடுத்துவிட்டது. பேட் கேய்ர்ஸி இதற்கான கடினமான அந்த நெறி முறைகளை (algorithm)முன்பே பலவருடங்களுக்கு முன் எழுதியிருந்தார். இன்று 2019ல் பல ஆர்ட்டிஃபிசியல் இன்டலிஜென்ஸ் சார்ந்த பல புரொகிராம்கள் ஒருவன் பின்னாட்களில் குற்றம் செய்ய வாய்ப்புண்டா என்பதைக் கூட அறியும் வகையில் இருக்கின்றன.

இப்படிச் சாதாரண மனிதர்கள் எழுதிய இந்தப் புரோகிராமால் நம் உள்ளார்ந்த நிலையைக் காட்டிக்கொடுக்க இயலுமானால், நம்மை உண்டாக்கிய தேவனுக்கு இது எவ்வளவு எளிது? நாம் இதை மனதில்கொண்டு நடப்பது மிகவும் அவசியமல்லவா?

**...தேவரீர் ஒருவரே எல்லா மனுபுத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக.**
**I இராஜாக்கள் 8:40**

தேவன் நம் இருதயத்தின் எல்லா நினைவுகளையும் அறிந்தவர். இதை எல்லா நேரங்களிலும் நினைவுகூர்வோம். நம் நிலைப்புத்தன்மையை (Consistency) எல்லா நாளும் உறுதி செய்து கொள்ளுவோம்.

# ஏதாகிலும் செய்தாக வேண்டும்...

கார்த்திகா ராஜ்குமார்

**நன்றாகப் பார்த்துக்கொள்**
**கண் திகட்ட விழுங்கிக்கொள்**

விரிந்து பரந்திருக்கும் பச்சைப் புல்வெளிகளை
அவற்றினூடேயே நழுவிப் போகும்
வனப்பு மிகு பாம்புப் பாதைகளை
கம்பீரமாய் உயர்ந்திருக்கும் விருட்சங்களை
மேகம் தொட விரும்பி
புறப்பட்டிருக்கும் அதன் கிளைகளை
ஆதவனின் உபயத்தால்
இளம் காலையின் மாயாஜாலமாய்...
ஒளிந்திருக்கும் ஒளிக் கதிர்களை
நின்றிருக்கும் மரங்களைச் சுற்றி அணைத்து
மேல் எழும்பித் தலையாட்டும் கொடிகளை
வண்ண வண்ண பூக்களைத் தன் மேல்
இறைத்துக் கொண்டது போலிருக்கும்
பசுமைப் புதர்களை, செடிகளை
வாலில், வயிற்றில், மூக்கில்
வண்ணம் காட்டும் பறவைகளை
தேனை மாந்தின மயக்கத்தில்
கும்மி அடித்துப் பறக்கும்
பட்டாம்பூச்சி வகைகளை
பெயர் தெரியா உயிர் இனங்களின்
கிறங்கடிக்கும் ரீங்காரங்களை

சளசளத்து சிறு கற்கள் புரளப் புரள
கடகடத்து சிரித்துக் கொண்டோடும்
தெளிநீர் ஓடையை
இவற்றினூடாய் சுதந்திரமாய் வாழும்
பல மிருக ஜீவன்களை...
இன்னும் கட்டிப் பிடிக்க
கைகளுடன் அடங்கா
பிரமாண்ட தனி மரங்களை
படை வீரர்களென அணிவகுத்திருக்கும்
அழ அழகான மர வரிசைகளை
கும்பலாய்க் கூடியிருந்து
தன்னுள் ரகசியம் காக்கும் மரங்களை
நிழல் பந்தலிட்டு நமக்கென்று
காத்திருக்கும் அம்மா மரங்களை

விதவிதமான பச்சைகளின்
கண்கள் குளிரும்
இயற்கையின் அற்புதங்களை
நன்றாகப் பார்த்துக்கொள்
கண் திகட்ட விழுங்கிக்கொள்.

பேராசை பிடித்த சுயநலமிகளின்
கான்கிரீட் காடுகள்
பெருகிக் கொண்டிருக்கின்றன.

சூழல் பற்றி உணர்வற்றவர்களிடம்
நவீன சடுதியில் வெட்டும் எந்திரங்கள்
காட்டுத் தீ... தீ... தீயிலும் கொடியதாய்
இந்த அறியாமைத் தீ கனன்று வர
ஏதாகிலும் செய்தாக வேண்டும்
ஒருவேளை நாளைய சந்ததி
தொலைக்காட்சியிலும்
வீடியோக்களில் மட்டும்
வனங்களை ரசிப்பது
சாத்தியமென்றாகலாம்.

**ஏதாகிலும் செய்தாக வேண்டும்.**





# அரசியல் பேசாமல் இருக்காதீர்!

## விளம்பர அரசியல்

✍ வில்பர்ட் C துரை

விளம்பரத் துறை என்பது எக்காலத்தும் நிலைத்து நிற்கும் ஒன்றாகும். அதன் வடிவங்கள்தாம் மாறுமே ஒழிய, விளம்பரத் துறைக்கான மவுசு என்றும் குறையாததாக இருக்கும். ஒரு காலத்தில் ரேடியோக்களில் கேட்ட விளம்பரங்கள் இன்றும் நினைவில் இருந்துகொண்டே இருக்கின்றன. இப்படியாக எந்தவொரு பொருளையும் சேவையையும் வெகுஜனங்களிடம் கொண்டு சேர்ப்பது விளம்பரம். அதைப்போலவே, சமூக அக்கறையுள்ள சிந்தனைகளையும் விழிப்புணர்வுகளையும் மக்களிடையே கொண்டு சென்றதில், செல்வதில், செல்லப்போவதில் விளம்பரத்துறையின் இடம் ஸ்திரமானது. இளம்பிள்ளை வாதம் என்று சொல்லப்பட்ட போலியோ ஒழிப்பு, காசநோய் ஒழிப்பு, பால்வினை நோய் பற்றிய விழிப்புணர்வு இவை போன்றவற்றிலெல்லாம் விளம்பரத்தின் பங்களிப்பு அளப்பரியது.



இப்படியாகப் பொருள், சேவை, விழிப் புணர்வு ஆகியனவற்றை மக்களிடையே கொண்டு சேர்க்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்த விளம்பரங்கள், தனிநபர்களின் புகழைப் பரப்புவதற்குமான ஒன்றாகவும் குறிப்பிட்ட சூழலில் உருவெடுத்தது. அதன் ஒரு வடிவமாக செய்தித்தாள்களிலும், சுவரொட்டிகள் மூல மாகவும் தங்களைப் பற்றி தாங்களே விளம்பரம் செய்துகொள்ளும் ஒரு போக்கு வெகுவாகப் பரவியது. அதன் தொடர் மாற்றங்கள்தான் இன்று ஃப்ளக்ஸ் பேனர்கள் வைத்துக்கொள்ளும் கலாச்சாரமாக வந்து நிற்கிறது. இதுவும் நீடித்திருக்கப்போவ தில்லை. கால மாற்றத்தில் ஒவ்வொன் றாக மாறுவதுபோல இதுவும் மாறிப்போய் கொண்டே இருக்கும். எப்படி SMS மூலமாக வரும் விளம்பரங்கள் குறைந்துவிட்டனவோ அதுபோல.

அடுத்த பரிமாணமாக டிஜிட்டல் முறை விளம்பரங்கள்தாம் வரிசையில் அடுத்து நிற்பது. எங்கோ ஒருமுறை நீங்கள் இணையத்தில் பார்த்தது, சற்று கூடுதல்

நேரம் உற்றுப் பார்த்தது என்பதை எல்லாம் கவனித்துக்கொண்டு, இணையத்தில் நீங்கள் உலவுகிற இடமெல்லாம் வழியை மறைத்து, உங்கள் கண் முன்னே நின்று, நீங்கள் இதை வாங்கினால்தான் நிம்மதியாக வாழ முடியும் என்பதுபோல் ஒரு நிர்பந்தத்தை உருவாக்கிவிடும் அளவுக்குப் போய்விட்டது. சரி, வாங்கித் தொலைவோம் என்றால் இதற்குத் துணையாக இதை வாங்குங்கள் என்று உபபொருட்களையும் வாங்கச் செய்துவிடுகிறார்கள். அது சரி, அது அவர்கள் வியாபார தந்திரம். யானை வாங்கினா தொரட்டியும் வாங்கணும்தானே?

சரி, விஷயத்திற்கு வருவோம். சுய விளம்பர மோகம் படு பயங்கர வேகமெடுத்து போகும் இடம்தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறது. எங்கே போய் முட்டி, மண்டையை உடைத்துக்கொள்ளுமோ தெரியவில்லை. அவரவர் செய்ய வேண்டிய வேலையைச் செய்வதெற்கெல்லாம் பாராட்டி பேனர் வைக்கிறார்கள். வைக்கிறார்களோ? வைக்கும்படி நிர்பந்திக்கப்படுகிறார்களோ? இரண்டுமேதான். ஒரு அமைச்சர் என்றால் அத்துறை சார்ந்த நடவடிக்கைகளைப் பார்வையிடுவது, ஆலோசிப்பது இதெல்லாம் கடமைதானே, வழக்கம்தானே? இதை செய்றதுக்குமாய்யா பாராட்டி பேனர் வைப்பீங்க? ஒரு டீக்கடை வைத்திருக்கும் நபர் தன் வீட்டிலிருந்து கடை வரை, நெடுவே ‘‘இன்று டீ போட்டு கொடுத்து, மக்களின் களைப்பை போக்க வருகை தரும் அன்னாரை வருக வருக என வரவேற்கிறோம்’’ என்று தனக்குத் தானே வைத்துக்கொண்டாலோ, தானே செலவு செய்து தன் குடும்பத்தினர் பெயரைக் கீழே போட்டுக்கொண்டாலோ எப்படி



வேடிக்கையாக இருக்கும்? அப்படித்தான் இருக்கிறது, இவர்களது வரவேற்பு பேனர்கள் கலாச்சாரம்.

நலத்திட்ட உதவிகள் வழங்குகிறோம் என்ற பெயரில் வெறும் ஆயிரக்கணக்கான தொகையை நலத்திட்ட உதவிகளுக்காகச் செலவு செய்து, அதனை விளம்பரப்படுத்த இலட்சக்கணக்கான தொகையை செலவு செய்வதை வாடிக்கையாகப் பார்க்கிறோம். கல்வெட்டில் பெயர் போடவில்லை என்றால், கைகலப்பு, வெட்டு குத்து என்றாகிவிடுகிறது. இருதரப்பினருக்கும் ஒரு நாளில் கண்டிப்பாக கல்வெட்டில் பெயர் பொறிக்கப்படும் என்பதை அந்நேரத்தில் மறந்துவிடுகிறார்கள். எங்கே எழுதப்பட வேண்டுமோ, அதைப்பற்றி கவலைப்படாமல் அற்பமான விஷயங்களில் சண்டையிடுகிறார்கள். அது சரி, சண்டை போட வாய்ப்புள்ள இடத்துலதான சண்டை போட முடியும்.

கிராமத்துல ஒரு பலமொழி சொல்லு வாங்க. அது பழமொழிதானே? எழுத்துப் பிழை என்று கண்டுபிடித்துவிட்டீர்களா? பலபொருட்களைத் தருவதால் இப்படியும் சொல்லிக் கொள்வோம். **‘உபகாரம் இல்லனாலும், உபத்திரவம் பண்ணாம இரு’** என்று ஒரு பழ(ல)மொழி. ஒரு



திரைப்படத்தில் அமைச்சர் ஒருவரை ஒரு தொலைக்காட்சியில் நேர்முகம் காண்பார்கள்.

அமைச்சர் : நாங்கதான் மருத்துவமனைகள் கட்டி குடுத்திருக்கோமே...

நிருபர் : ஆனா, அது எங்க இருக்குன்னு தெரியலயாம் ஐயா...

அமைச்சர் : ஆங்காங்கே, மருத்துவமனை செல்லும் வழி என்று வழிகாட்டிப் பலகைகள் வைத்திருக்கிறோமே...

நிருபர் : மருத்துவமனை தந்த மாமணியே... தியாக திரு உருவமே...

அமைச்சர் : (வெட்கத்துடன் சிரித்துக்கொண்டே) அது நம்ம தொண்டர்கள் நமக்கு பாசமா குடுத்த அடைமொழி தம்பி...

நிருபர் : அது இருக்கட்டும்யா... இப்டிலாம் போஸ்டர் அடிச்சு, அந்த வழிகாட்டி பலகைகள்ல ஒட்டி வழி தெரியாம பண்ணிட்டாங்க ஐயா..

அமைச்சர் : (திருதிரு....) ?!?!?!

ஒருவேளை இது சினிமாத்தனமாக இருந்தாலும், அடியாழத்தின் பொருள் உண்மையானது. சமீபத்தில், போக்குவரத்து மிகுந்த தலைநகர சாலையில் வைக்கப்பட்ட வரவேற்பு பேனர் ஒன்று விழுந்து, இளம் பெண் ஒருவர் சாலையில் அகோரமாக மரணித்த செய்தி நம்மையெல்லாம் உலுக்கியது. உடனே, ஒட்டுமொத்தமாக பேனருக்குத் தடை என்ற குரல் எழுவதைக் கேட்க முடிந்தது. “வச்சா குடுமி, செரச்சா மொட்ட” என்று சொல்வதுபோலத்தான் இருக்கிறது. சரியான அளவு, பார்வைக்கு அழகானபடி கிராப்பு வெட்டினால் ஆகாதா?

அந்தத் தொழிலை நம்பியிருக்கும் இலட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரம் என்னாவது? ஒரு தொழிலை அனுமதிக்கும் முன்னர், அல்லது அவசியம் நேரிடும்போது நெறிமுறைப்படுத்தும்படியான யோசனை களை முன்வைப்பது, கட்டாயப்படுத்துவது தான் சரியாக இருக்குமே அன்றி, “இழுத்து மூடுங்க சார், சுட்டு கொன்னுருங்க சார்” வகை கோஷங்கள் எல்லாம் நம் பக்கமும் காத்து வீசும்போது திரும்பும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

நண்பர் மைக்கேல் வேடிக்கையாகச் சொல்வார், “வெட்டு ரெண்டு, துண்டு ஒன்று”. இரண்டு ஓரங்களிலும் உள்ளவற்றை விலக்கிவிட்டு, பெறும் நடுப்பகுதி சிறந்ததாக இருக்கும். அது மீனாக இருந்தாலும் சரி, கரும்பாக இருந்தாலும் சரி. அதுபோல, எல்லா விஷயங்களிலும் உள்ள சாதக, பாதகங்களை ஆய்ந்து, அடுத்தவருக்கான கண்ணாடியையும் அணிந்து பார்க்கும் போது பிடிபடாத சிலதுகளும் பலதுகளும் பிடிபடலாம். பாவம், அந்த பேனர் வைத்தவர்தான் இன்னும் பிடிபடவில்லை...



**புத்தகங்களும், நண்பர்களும் குறைவாக இருந்தாலும் சிறந்ததாக இருக்க வேண்டும்.**

– சாக்ரடீஸ்

## என் பார்வை...

எண்ணிக்கை முக்கியமல்ல. எண்ணங்களே முக்கியம் என்கிற இறையன்பு அவர்களின் கூற்று நினைவுக்கு வருகிறது. அளவாக இருந்தாலும், வளமாக இருப்பதில் தான் சிறப்பு.

சிறிய மரமாக இருந்தாலும் தேக்குக்கு உரிய மரியாதையே தனி. ஓங்கி வளர்ந்த உலக மரம் (இலவம் மரம்) உத்திரத்திற்கு உதவாது என்கிற மூத்தோர் சொல் எத்தனை அருமையானது.

பரந்து விரிந்த கடல் நீரின் ஒரு துளிகூட, தாகம் தீர்க்காது. ஆனால், மிகச் சிறிய சுனை நீரின் சுவைக்கு, அது இணையாகாது.

அதைப்போலவே, ஆழ்ந்த சிந்தனைக்கு உட்படுத்தும் கருவினைக் கொண்டு படைக்கப் படும் தலைசிறந்த நூல்களும், நட்பின் இலக்கணம் மாறாத நண்பர்களும் நமக்குக் குறைவாக வாய்க்கப் பெற்றாலும், நம் வாழ்வின் மேன்மை நிறைவாக மாற்றம்பெறும்.

நல்ல நண்பர்களும், நல்ல நூல்களும் ஒரே நூலால் கட்டப்பட்டு பிணைக்கப் பட்டவை. இரு தரப்பும் இணைந்தே செல்லும் தண்டவாளங்களுக்கு ஒப்பானவை என்பது உலகறிந்த உண்மை.

இந்த உலகில் நட்பை விட விலை மதிப்புள்ளது வேறு எதுவும் இல்லை. தங்கள் வாழ்க்கையிலிருந்து நட்பை ஒதுக்கி விட்டவர்கள், கதிரவனால் கைவிடப்பட்ட இருள்சூழ் பூமிபோல, மகிழ்ச்சியின் ஒளி இன்றிப் போவார்கள் என்பதும் நிதர்சனம்.

**கவிஞர்**
**செ.திராவிடமணி**





## அரட்டை பாப்

ராபர்ட் க்ளமெண்ட்ஸ்

# அழுக்குப் பாதங்களுக்காகவே...

அந்தப் பள்ளியின் முதல்வராக இருக்கிற அந்த நபர் என்னை ஒரு வகுப்பறைக்கு அழைத்துச் சென்றார். “பாருங்க அந்த பிள்ளைய! போன வருஷம் அட்மிஷன் போடச் சொல்லி நீங்க கேட்டீங்களே, அவதான்... அவளோட முடிய பாருங்க!”.

“அதுல என்ன ப்ரச்சன?” என்று நான் புரியாமல் கேட்டேன்.

“கிளாஸ்ல மற்ற பிள்ளைங்க முடிய பாருங்க... எவ்ளோ அழகா தலை வாரிருக்காங்க... இப்ப இவள பாருங்க...” என்று அந்த முதல்வர் என் காதில் கிசுகிசுத்தார்.

என் முன் தலைகுனிந்தபடி நின்ற அந்த மாணவியை நான் பார்த்தேன். அவளுடைய பெற்றோர்களை எனக்குத் தெரியும். மிகவும் ஏழ்மையானவர்கள். “இந்தப் பள்ளிக்கூடத்துல எம் புள்ள சேந்து படிச்சா, நாங்க படுற மாத்ரி கஷ்டம் அவ பட வேண்டிருக்காது” என்று அவளுடைய அப்பா என்னிடம் கெஞ்சிக் கேட்டிருந்தார்.

“நீங்க அவளுக்கு கத்து குடுக்கலாம் இல்லயா சிஸ்டர்? அதுக்காகத்தான இந்த தொண்டு நிறுவனம் ஆரம்பிச்சாங்க? ஏழைகளுக்கு சேவை செய்றதுக்குத்தான? பணக்காரங்களையே பாத்து பழகிட்டதால அத மறந்துட்டீங்களா?” என்று அந்த முதல்வரைப் பார்த்து நான் கேட்டேன்.

நான் வெறுத்துப்போய் அந்தப் பள்ளியை விட்டு வெளியேறினேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு தம்முடைய சீடர்களின் பாதங்களைக் கழுவிய காட்சி என் கண் முன்னே விரிந்தது. இந்தச் சடங்கினை மதப்பற்றாளர்கள் பின்பற்றுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், ஒரு ஏழை மாணவிக்குத் தலைவார கற்றுக் கொடுப்பதும் இதே போன்று மற்றவருடைய பாதங்களைக் கழுவும் ஒரு அடையாளம்தான் என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன?

தொண்டு நிறுவனம் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிற நிறைய இடங்களில் இது போன்றவை நடப்பதை நான் அறிவேன்.



> "அழுக்குப் பாதங்களுக்காகவே அந்தப் பள்ளிகளும், அநேக கல்லூரிகளும், தொண்டு நிறுவனங்களும் துவங்கப்பட்டன. அழுக்குப் பாதங்களைத்தான் நீங்களும் நானும் கழுவ வேண்டும்."

கடும் சிரமங்களுக்கிடையில் ஏழைகளுக் காகத் துவங்கப்பட்ட மருத்துவமனைகள், இப்போது மற்ற பெரிய மருத்துவமனைக்குப் போய் சிகிச்சை எடுக்கத் திராணியுள்ளவர் களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கின் றன. இதே நோக்கில் துவங்கப்பட்ட பள்ளிகளும் கல்லூரிகளும் மேட்டுக் குடிக்கானதாக மாறி, ஏழைகளின்மீது பரிதாபப் பார்வை வீசுகின்றன.


இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவ குனிந்தபோது, "என் பாதங்களை நீர் தொடாதீர் ஆண்டவரே" என்று அவர்கள் சொல்லும் காட்சியை நான் யோசித்துப் பார்க்கிறேன்.

"ஏன் தொடக்கூடாது?" என்று இயேசு கேட்டார்.

"அழுக்கா இருக்குது ஆண்டவரே! பாதங்கள எல்லாம் நல்லா கவனிச்சு பாத்து, ஒரு இருவது ஆட்கள நாங்க கூட்டிட்டு வந்திருக்றோம்; ஏற்கனவே நல்ல சோப்பு போட்டு, அழுக்கு தேச்சு கழுவிருக்றோம். நகத்தை எல்லாம் நல்லா வெட்டிட்டோம். ஏன்னா உங்க கைய கிழிச்சிற கூடாது பாருங்க! நல்ல நறுமண தைலமும் போட்ருக்றோம். அத நீங்க கழுவுங்க"

ஆண்டவர் அவர்களைச் சோகமாகப் பார்த்து, "அழுக்கான பாதங்கள கழுவத்தான் நா வந்தேன்" என்று சொல்வார் என்று நான் அறிந்திருக்கிறேன்.

ஆமாம், அந்த அழுக்குப் பாதங்களுக் காகவே அந்தப் பள்ளிகளும், அநேக கல்லூரிகளும், தொண்டு நிறுவனங்களும் துவங்கப்பட்டன. அழுக்குப் பாதங்களைத் தான் நீங்களும் நானும் கழுவ வேண்டும். அப்படி உங்களால் கழுவ முடியவில்லை என்றால் உங்கள் கடையை (தொண்டு நிறுவனத்தை) சாத்திவிட்டு போய்விடுங்கள். உங்களுடைய ஆடம்பரமான வாஷ் பேசின் களை வைத்துக்கொண்டு போலியாக நடிக்காதீர்கள்!




## வேதத்தை

**வாசிக்கும்போது புரிவதை விட, நேசிக்கும்போது அதிகம் புரியும். போதிக்கும்போது புரிவதைவிட, பாதிக்கும்போது அதிகம் புரியும்.**

– ஜாண் செல்வின்

# அனாஹெராவின் விரக்தி

The DISILLUSIONMENT of ANAHERA DANIELS

by J.D.SCOTT



நான் சட்டென தடுமாறிப் பின்னால் நகர்ந்தேன். என் கைகள் சருகான இலைகளுக்குள் துளாவின. நான் நகர்ந்து தவண்டு சென்றதால் என் உடை தரையில் உரசிக் கொண்டு வந்தது. முடிந்தவரை எனக்கும் அந்த அன்னியனுக்கும் நடுவில் அதிகமான இடைவெளி இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அவன் முகத்தில் நிழல் மூடியிருந்தது. அவன் கைகள் அவன் நெஞ்சில் ஒட்டி வைக்கப்பட்டிருந்தன. என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தான். அப்போது நிலவின் ஒளியில் அவன் முகம் தெரிந்தது. மோசமான ஒரு காட்சிக்காக என்னை நான் ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். ஒரு அழகான ஆண்மகனின் முகமும் அதில் ஒரு புன்னகையும் தெரிந்தது. என்னைத் தூக்கி விடுவதற்காகத் தன் கையையும் நீட்டியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் வயதுதான் அந்த ஆளுக்கும் இருக்கும். ஆனால் என்னைத் தட்டிக் கீழே விழவைத்த அந்த உயரமான, உறுதியான நபரை நான் இப்படி எதிர்பார்க்கவில்லை.

“உனக்கு ஒரு உதவிக்கரம் தேவைன்னு நினைக்கிறேன்” அவன் வார்த்தைகளுக்குள்ளேயே சிரிப்பு கொப்பளித்தது.

என் நிலைமையில் அவனுடைய நகைச்சுவையை ரசிக்க இயலவில்லை. அசையாமல் உட்கார்ந்திருந்தேன். என்ன பதில் சொல்வது அல்லது செய்வது என்று உறுதியாகத் தெரியவில்லை எனக்கு. இந்தக் காட்டுக்குள் பயப்பட வேண்டிய பல

விஷயங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். இவனும் அவற்றில் ஒன்றா என்னால் முடிவு செய்ய முடியவில்லை. நீட்டிய கையை இப்போது மடக்கிக் கொண்டான். என் அருகில் ஒரு காலின் முழங்காலை மடக்கி உட்கார்ந்தான். விசாரிக்கும் தன்மை அவன் கண்களில் தெரிந்தது. தன் தலையை சிறிது சாய்த்துப் பார்த்தான். அமைதியான அவன் கண்களுக்கு மேல் புருவம் சிறிது உயர்ந்தது. மெதுவாகத் தன் விரல்களை, தோள் வரை தொங்கிய தன் தலை முடிக்குள் விட்டு கோதினான். உன்னை மாதிரி ஆளுக்கெல்லாம் என்ன உதவி செய்யறது?''என்று அவன் என்னை நோக்கிக் கேட்பதுபோலத் தோன்றியது.

``உனக்கு ஒண்ணும் பிரச்சன இல்லியே?'' என்று கேட்டான். அவன் புன்னகையில் ஒரு குறும்பு தெரிந்தாலும் அவன் குரலில் எந்த விதமான முரட்டுத்தனமும் தெரியவில்லை.

என் மூச்சை இதுவரை இழுத்துப் பிடித்து வைத்திருந்ததுபோல மெதுவாக பெருமூச்சு ஒன்றை வெளியிட்டேன். ``நான் நல்லாத்தான் இருக்கேன்'' என்று பொய் சொன்னேன். என் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் அல்லவா!

``உன் பெயர் என்ன?'' சாதாரணமாகக் கேட்டான் அவன். ஏற்கனவே உதவி இல்லாத ஆளாக உணர்ந்த நான், பதில் சொன்னால் அவனுக்கு அடிமையாகிவிட வேண்டி இருக்குமோ என்று நினைத்து அமைதியாக இருந்தேன்.

``நீ யார்? நான் எங்கே இருக்கேன்? என்னை துரத்திட்டு வந்தது என்ன? அதை நீ பாத்தியா?'' நான் எதனிடம் இருந்து தப்பி வந்தேன் என்பது என் நினைவுக்கு வந்தது. அது என் இடது தோளைத் தொட்டதும் எனக்கு நினைவில் இருக்கிறது. என் விரல் நுனியில் இரத்தம் உறைந்துபோய் இருந்தது. நான் கேட்ட தொனி எங்கள் இருவருக்குமே ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவன் முகத்தில் இப்போது எந்த உணர்ச்சியும் இல்லை. இப்போது என் கண்களுக்குள் அவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது நான் எனக்கு உதவி செய்ய வந்தவனை எதிரியாக்கிவிட்டேனோ என்று நினைத்தேன். மீண்டும் அவன் உதடுகள் புன்னகையால்





சிறிது வளைந்தன. அதுதான் நான் கிண்டல் செய்யப்பட்டதிலேயே மிகவும் அதிக அழகான நிகழ்வாக இருந்தது.

“அனுமதி இல்லாத நிலத்தில் நடு இரவு நேரத்தில் நீதான் சுற்றிக் கொண்டிருந்தாய். நீ இங்கே அத்துமீறி நுழைந்தவள் என்பது தெளிவாகத் தெரிகிறது. உன்னிடம் கேள்வி கேட்க எனக்கு உரிமை இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். அவன் என்னை இன்னும் மேலும் கீழுமாகப் பார்த்தான்.

என் செருப்பில் சேறு ஒட்டிக் கொண்டிருந்தது. என் பிங்க் நிற உடையில் ஒட்டிக் கொண்டிருந்த தூசிகளும் அழுக்குகளும் என்னை இந்த இடத்தில் ஒரு அன்னியப் பெண்ணாகக் காட்டியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. என்னைப் பார்க்க அவனுக்கு எப்படித் தெரிகிறதோ? யாருக்குத் தெரியும்? என் உடைக்கும் அவன் உடைக்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. அவனது நீண்ட பழுப்பு நிற சட்டையும், கருமையான நிறம் கொண்ட உடைகளும் நாங்கள் இருந்த அந்த சூழ்நிலைக்குப் பொருத்தமானதாக இருந்தன. இந்த இடத்தில் அவன் புது ஆள் போலத் தெரியவில்லை. ஆனாலும் நான் என் மனதை மாற்றிக் கொள்வதாக இல்லை.

“அப்படின்னா, நீ எனக்கு பதில் சொல்ல மாட்டியா?” நான் முடிந்தவரை தைரியமாகக் கேட்டேன். அவனது கூர்ந்த பார்வை எனக்கு ஒருவித பயத்தைக் கொடுத்தது. நான் வேறு பக்கமாகப் பார்த்தேன். என் தோளில் தன் கையை வைக்கப்போனபோது நான் சட்டென நகர்ந்தேன்.

“பயப்படாதே. நான் உன்ன ஒண்ணும் செஞ்சிட மாட்டேன். நான் உனக்கு உதவி செய்யத்தான் போறேன்” அவன் தன் உள்ளங்கைகளைத் தரையை நோக்கித் திருப்பி, தான் சமாதானமாக இருப்பதாக எனக்குக் காட்டினான். எனக்குக் காரணம் தெரியாவிட்டாலும் நான் அவனை நம்பினேன். ஒருவேளை அவனை நம்ப வேண்டும் என எனக்கு விருப்பம் இருந்ததோ என்னவோ. இந்தச் சூழ்நிலையில் நம் கட்சியில் ஒரு ஆள் இருப்பது நல்லதுதான். நான் அவன் கைக்கு எட்டும் தூரத்துக்கு நகர்ந்தேன். அவன் என் தோளில் இருந்த காயத்தைத் தொட்டான், நான் வெடுக் என்று துடித்து, ஆ என்று கத்தினேன். எனக்கு இருந்த மரியாதை, மானம் எல்லாம் வலி வந்ததும் பறந்து போயின. அந்தக் காயத்திலிருந்து வந்திருந்த இரத்தம் கருமையாக

உறைந்துபோய் இருந்தது என்பது அந்த நிலவின் வெளிச்சத்தில் தெரிந்தது. என் இரவு உடுப்பிலும் கிழிசல் இருந்தது. என் அம்மாவிடமும் அப்பாவிடமும், நடந்தது என்ன என்று சொன்னால், நிச்சயமாக, நான் எதுவும் போதைப் பொருளைச் சாப்பிட்டிருக்கிறேனா என்று சோதனைக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள்.

“இந்த காயத்த உடனடியா கவனிக்கணும். ஆனா இங்க இல்ல. இந்த இடத்துல இன்னும் இருந்துட்டு இருந்தா நிச்சயமா அது ஆபத்துதான். நாம உடனே இங்கே இருந்து போகணும்.”

எனக்கே அது சரிதான் என்று தெரிந்தது.

அவன் எழுந்து நின்றான். மீண்டும் என்னை நோக்கி உதவி செய்யக் கையை நீட்டினான். அவனது விரிந்த உள்ளங்கையையும், அருமையான புன்னகையையும் நான் சிறிது கவனித்துப் பார்த்தேன். அவன் கையைப் பிடித்து எழுந்திருக்க வேண்டும் என்றுதான் விரும்பினேன், ஆனால் என் பிடிவாதம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. எனக்குப் பதில் தெரிய வேண்டும் என்ற உறுதி இருப்பதை அவன் புரிந்து கொண்டான். அவனது கண்களிலேயே அது தெரிந்தது.

“இங்கப் பாரு, கண்டிப்பா உன் கேள்விகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்லுவேன். ஆனா இப்போ நாம இந்த இடத்துல இருந்து உடனே போகணும். இந்த காட்டுக்குள்ள வர்றதுக்கு தடை இருக்குது. அதுக்கு காரணம் இருக்குது. இங்கே இருந்தா பாதுகாப்பு இல்ல. நாம பத்திரமான ஒரு இடத்துக்குப் போகணும். எனக்குத் தெரிஞ்ச ஒரு இடம் இருக்குது. வா.”

அவன் மெதுவான இரகசியமான குரலில்தான் பேசினான். யாராவது அவன் திட்டத்தைக் கேட்டுவிடக்கூடாது என்ற கவனம் அவனிடம் இருந்தது. அவன் சுற்றி இருந்த மரங்களை ஒரு முறை நோட்டமிட்டான். எனக்கு அந்த இறக்கை வைத்த மிருகத்திடம் இருந்து தாக்குதல் நடக்காமல் இருந்திருந்தால், அவன் மரத்தின் உச்சியில் கூர்ந்து பார்ப்பது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவனுக்கும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

மூன்றாவது முறையாக, அவன் எனக்கு உதவி செய்வதற்காகத் தன் கையை நீட்டினான். இனியும் நான் அதைத் தவிர்த்தால் இந்த இடத்தில் நான் தனியாய்த்தான் இருக்க வேண்டியதிருக்கும் என்று புரிந்தது. நான் என் கையை அவன் கையில் வைக்க, அவன் நன்றாகப் பிடித்து சட்டென என்னைத் தூக்கிவிட்டான். என் கையின் குளிர்ச்சியை உணர்ந்ததும்



அவன் புன்னகை மாறியது. தான் மேலே அணிந்திருந்த வெளிப்புற உடையைக் கழற்றி என் மேல் போர்த்தினான். நானும் ஒன்றும் சொல்லாமல் வலது கையை சட்டென்று உள்ளே விட்டு அதை அணிந்து கொண்டேன். இடது கை உள்ளே போகும்போதுதான் வலித்தது. எனக்குக் கிடைத்த அந்த வெதுவெதுப்பான உணர்வு எனக்குப் பரவசத்தைக் கொடுத்தது. அவன் அந்த உடையின் பித்தளைப் பொத்தான்களை மாட்டிவிட்டான். என்னால் அதைச் செய்ய முடியாததால்தான் அவன் உதவினான். ஆனாலும் அவன் உதவியை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கமாக இருந்தது. நானும் சிறுபிள்ளைத்தனமாக சிந்திப்பதாக நினைத்துக் கொண்டேன். தன் இடுப்பில் இருந்த பெல்ட்டைக் கழற்றி என் இடது கை தொங்காமல் இருக்க அதை ஒரு தொட்டில்போல கட்டி விட்டான். எனக்கு இப்போது வலி சிறிது குறைந்ததுபோல் இருந்தது.

“தாங்க் யூ” அவனது நல்ல குணத்தால் என் பிடிவாதம் எல்லாம் ஓடிப் போயிருந்தது. அவனும் பதிலுக்கு புன்னகைத்தான். என் வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறப்பது போன்ற ஒரு உணர்வு வந்தது.

இப்போது அவன் என் வலது கையைப் பிடித்து சிறிது பலமாக அழுத்தியபடியே தன் உதட்டின் மீது விரலை வைத்து, “ஷ்” என்றான். இனி அமைதியாக நடந்து செல்ல வேண்டும் என்ற அறிவிப்பை ஒரே எழுத்தில் சொல்லிவிட்டான்.

நான் அவனைப் பின்தொடர்ந்து சென்றேன். சிறிது குனிந்து கொண்டுதான் சென்றேன். எங்களைச் சுற்றி இருந்தவற்றைக் கலைக்காமல் அவற்றைச் சுற்றியே நடந்து போனான் அவன். சருகுகளைத் தவிர்த்து சத்தமில்லாமல் நடப்பதற்கான கடினமான தரையையே நடப்பதற்குத் தெரிந்தெடுத்தான். பனி விழுந்த தரையிலும் நாங்கள் நடந்து வந்த தடம் இனி விழும் பனியால் மறைக்கப்பட்டுவிடும். இதற்கு முன்பாகக் கூட இப்படிப்பட்ட இரகசியப் பயணங்களை அவன் செய்திருக்க வேண்டும். அவனது ஒவ்வொரு அசைவையும் நானும் பின்பற்ற முயற்சி செய்தேன். அவனது உடையின் மணம் என் கவனத்தைத் திசை திருப்பியது. நெருப்பும், தோலும் கலந்த ஒரு மணம் அது. அதன் மென்மையான தன்மையும் குளிரை உள்ளே விடாமல் என்னை வெதுவெதுப்பாக வைத்திருந்ததும் என்னை வசதியாக உணர வைத்திருந்தன. அந்த காட்டின் உயிரினங்கள் வெளியிட்ட வினோதமான சத்தங்கள், என்னைப் பிடித்து அழைத்துச் செல்லும் கதகதப்பான கை, ஆழ்ந்த காட்டின் மணங்கள், அனைத்தும் என்





தோளில் இருந்த வலியை மறக்கச் செய்தன.

அவன் எவ்வளவு காலமாக இந்தக் காட்டுக்குள் இருந்திருப்பானோ என்று ஆச்சரியப்பட்டேன். அந்தக் காட்டின் ஒவ்வொரு சதுர அடியும் அவனுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்திருந்ததுபோல் தோன்றியது. போகின்ற வழியைப் பற்றிய உறுதி அவனுக்கு இருந்தது. அவ்வப்போது நிழல் இல்லாத வெளிகளில் தெரிந்த நிலவின் வெளிச்சத்தில் அவனை நன்றாகப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. முழுக்கை சட்டை, பழுப்பு நிறத்தில் அணிந்திருக்கிறான். அது ராணுவ வீரனைப் போன்ற தோற்றத்தை அவனுக்குக் கொடுத்தது. அவன் தோளில் சிவப்பு பட்டைகளும் பல நிறங்களில் சில வினோதமான அடையாளங்களும் இருந்தன. அவன் அணிந்திருந்த நீண்ட கால் சட்டைக்குள் அந்தச் சட்டை செருகப்பட்டிருந்தது. சில பைகள் அவன் கால்சட்டையின் பக்கவாட்டில் இருந்தன. அவனது காலணியைத் தொடும் வகையில் சில பைகள் அவன் கால்சட்டையில் இருந்து தொங்கிக் கொண்டிருந்தன.

சிறு சிறு ஓடைகள், ஆறுகளில் நான் செல்ல உதவினான். என் கையை மட்டும் எந்தச் சூழலிலும் விடவே இல்லை. நான் பாதுகாப்பாகச் செல்கிறேனா அல்லது ஒரு கைதியாக அழைத்துச் செல்லப்படுகிறேனா என்ற சந்தேகமும் கூட அவ்வப்போது எனக்கு வந்தது. எங்களைச் சுற்றியிருந்த மூடுபனியானது மேலும் மேலும் அடர்த்தியாகிக் கொண்டே போனது. வழியைக் கண்களால் பார்ப்பது கடினமாக இருந்தது. என் கையை முகத்துக்கு முன்பாகக் கொண்டு வந்தால்கூட அதுவும் தெரியாத அளவு இருந்தது மூடுபனி. அதனால்தான் அவன் என் கையை இறுக்கமாகப் பிடித்திருக்கிறான் போலும். இந்த நிலையில் தொலைந்து போவது என்பது மிக எளிதாக நடக்கக் கூடியதுதான்.

எனக்கு நடக்கும் இந்த நிகழ்வுகள் எல்லாமே மதிப்பானவைகளாகத்தான் இருக்கும் என்று எனக்கு நானே பல தடவைகள் சொல்லிக் கொண்டேன். நாங்கள் சேர வேண்டிய இடம் வந்த பின், அவனிடம் கேட்க என்னிடம் பல கேள்விகள் இருந்தன. அவனிடமும் அவற்றுக்கு எல்லாம் பதில் இருக்கும் என்று நம்பினேன். இந்தச் சூழலில் என் தோள்பட்டை வலிக்கத் துவங்கியது. ஓய்வு வேண்டும் என்று உடல் சொன்னாலும், பாதுகாப்பு வேண்டும் என்று மனது சமாதானம் சொல்லியது.

ஒரு உயரமான கல் சுவரின் அருகே நின்றோம். அங்கே மரங்கள் அதிகம் இல்லை. அடுத்து போவதற்கு வழியே இல்லாத ஒரு இடத்துக்குத்தான்



இவ்வளவு நேரமும் நடந்து வந்தோமா என்று நினைத்தேன். இதைச் சுற்றிப் போவதற்கு வழியே இல்லை, அத்தனை பிரம்மாண்டமாக இருந்தது அந்தச் சுவர். பழைய இடத்தில் இருந்திருப்பதே அதிக பாதுகாப்பாக இருந்திருக்குமோ என்று நினைக்கத் தோன்றியது. அங்கே இருந்தால் ஓடிப் போகவாவது வாய்ப்பு இருந்திருக்கும். இங்கே வழியே இல்லையே? அவன் திரும்பி தூரத்திலிருந்த மரங்களின் வரிசையைத் தன் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். எதுவும் தெரியவில்லை.

இந்த மோசமான திட்டத்துக்காக அவனைத் திட்டலாம் என்று நினைத்தபோது என் கையை விட்டுவிட்டு, அந்தச் சுவருக்கு அருகில் இருந்த ஒரு சிறு புதருக்குள் தன் இரு கைகளையும் விட்டு எதையோ தூக்கி எடுத்தான். அது அதிக எடையுடன் இருந்தது என்பது அவனது முனகலில் தெரிந்தது. அவன் தூக்கி எடுத்த புதருக்குக் கீழே நிழலாக ஒரு சதுரமான இடம் தெரிந்தது. உள்ளே எட்டிப் பார்த்தால் சிறிய படிக்கட்டு உள்ளே செல்வது தெரிந்தது. தலையை அசைத்து என்னை உள்ளே இறங்கும்படி சொன்னான். எனக்கு உள்ளே போக விருப்பம் இல்லை. இதுவரை நடந்து வந்த பாதையை நினைத்துப் பார்த்தேன். எனக்கு உதவி செய்ய வந்த இந்த அழகான இளைஞனைப் பற்றி சிந்தித்தேன். இந்த மங்கலான படிக்கட்டைவிட வசதியான என் படுக்கையையே என் முழு உடலும் தேடினது. அந்தப் பாதுகாப்பான படுக்கையில் இருக்கும் உணர்வு என் வாழ்வில் இனி கிடைக்குமா என்ற சந்தேகம் எனக்கு வந்தது. அந்த மரங்களுக்கு அப்பால் இருக்கின்ற பயங்கரத்தை எதிர்கொள்வதைவிட இவனைப் பின் தொடர்ந்து போவதுதான் பாதுகாப்பானது என்று என் உள்மனம் எனக்குள் உரையாடியது. நான் படியில் அடியெடுத்து வைத்தேன். அந்த வாசலை மறைத்த புதரை மீண்டும் அங்கே வைத்துவிட்டு என்னைத் தொடர்ந்து அருகிலேயே அவன் வந்து கொண்டிருந்தான். இருட்டாக இருந்த அந்தச் சுரங்கத்தில் திடீரென பந்தங்கள் இருப்பதுபோல வெளிச்சம் தோன்றியது. நட்சத்திரம்போல வெளிச்சம் சிதறவும் செய்தது. திரும்பிப் பார்த்தால் பென்சில்போல இருந்த ஒரு குச்சியைப்


பிடித்துக் கொண்டிருந்தான் அவன். அதிலிருந்து வெளிச்சம் அருமையாக வந்து கொண்டிருந்தது.

“கீழே போ” என்று மென்மையாகச் சொன்னான் அவன். நான் யோசித்தேன். அசையாமல் நின்று கொண்டிருந்தேன். அவன் சொன்னான், “பரவால்ல, நான் உன் பின்னாலேயே வந்துட்டு இருப்பேன்.”

நான் அவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தேன். படிகளில் இறங்கத் துவங்கினேன்.

அந்த வெளிச்சக் குச்சி வினோதமான ஆரஞ்சு நிற வெளிச்சத்தைக் கொடுத்தது. நாங்கள் இறங்குகின்ற படிகளில் மூன்றை எங்களுக்கு முன் வெளிச்சப்படுத்திக் காட்டியது. அந்த வெவ்வேறு அளவிலான படிகளில் நான் தடுமாறும் போதெல்லாம், குளிர்ச்சியாக இருந்த பாறை சுவரை என் கைகளால் தொட்டுப் பிடித்துக் கொண்டு சென்றேன். தாழ்வாக இருந்த அந்தச் சுரங்கத்தின் கூரையில் என் தலை இடித்துவிடாதபடி கவனமாகப் போக வேண்டியிருந்தது.

நாங்களும் இறங்கிக் கொண்டே இருந்ததுபோல தோன்றியது. ஒவ்வொரு படியில் இறங்கும்போது, சுத்தமான காற்று குறைந்து, வெம்மையான காற்றை நாங்கள் சுவாசிப்பது தெரிந்தது. எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம், இனி எவ்வளவு தூரம் போக வேண்டும் என்ற கேள்விதான் எனக்குள் உருவாகிக் கொண்டே இருந்தது. என் வயிற்றுக்குள் ஒரு வினோதமான அனுபவம் நடந்தது. தப்பான வழியில் போய்க் கொண்டிருக்கிறேனா? நான் கூட அந்த மரங்களில் இருந்த மணிகளிடம் போய், மீண்டும் என் வீட்டுக்குப் போயிருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அங்கேயும் அந்த இறக்கையுள்ள மிருகம் இருந்து கொண்டு இருக்குமே? அந்தச் சூழலை மீண்டும் சந்திக்க வேண்டியிருக்குமோ என்ற கேள்வி எனக்குள் வந்து போய்க் கொண்டிருந்தது. தோளில் வலியும் இதே தீவிரத்துடன் இருந்து கொண்டிருந்தது. இந்த வழியில் நான் போய்க் கொண்டிருப்பதிலும் ஏதோ ஒன்று சரியாக இல்லாதது போன்ற உணர்வு இருந்தது. நான் சட்டென்று நின்றேன். அவன் இதை எதிர்பார்த்திருக்கவில்லை, ஆகவே, கிட்டத்தட்ட என் மேல் மோதியே விட்டான். நான் நின்று அவன் முகத்தைப் பார்த்து, என்னால் இதற்கு மேலும் கீழே நடக்க முடியாது என்று சொன்னேன். இந்தப் பயமுறுத்தும் இருட்டு சுரங்கத்தில் இருந்து விரைவில் வெளியேற வேண்டும் என்ற கருத்தை அவனிடம் சொன்னேன். ஆனால் எனக்கு மேலே படியில் என்னை மறைத்துக் கொள்வதுபோல, தனது பெரிய உடலை என் எதிரில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் அவன்.





“உனக்கு என்ன பிரச்சனை? ஏன் நின்னுட்டே?” அவன் குரல் அந்தச் சுரங்கம் முழுவதிலும் எதிரொலித்தது. அவன் முகத்தில் மெலிதான ஒளி படவே, அவன் முகத்தில் ஒரு நிழல் தோன்றியது. அவனது நட்பு சாயல் மாறி ஒரு வகையான கடினமான முகம் தெரிந்தது. அந்த ஆரஞ்சு நிற ஒளி அவன் விழிகளில் எதிரொளித்தது. என்னைவிட ஒரு படி மேலாக அவன் நின்று கொண்டிருந்தான். என்னைக் கீழ் நோக்கி, என்னை, என் செயலை ஏற்றுக் கொள்ளாததுபோல பார்த்துக் கொண்டிருந்தான்.

“நான் திரும்பப் போறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன். தப்பு நடந்து போச்சு” என்றேன். என் குரல் சிறிது தடுமாற்றத்துடன்தான் இருந்தது. அந்தச் சிறிய இடத்துக்குள் என் வார்த்தைகள் பெரிதாக எதிரொலித்தன. நான் என் குரலைச் சரி செய்து கொண்டேன். என்னை நானே என் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். எனக்குள் எவ்வளவு பயம் இருக்கிறது என்பதை அவனுக்குக் காட்டிக் கொள்ளக்கூடாது என்று முயற்சி செய்தேன். “மன்னிச்சுக்கோ, உன்னோட உதவிக்கு எல்லாம் நன்றி. ஆனா நான் இப்போ போகணும்.” அவன் எங்கேயும் அசைவதுபோலத் தெரியவில்லை. என் கை என் பைஜாமாவின் பைக்குள் துளாவியது. அந்தக் கத்தியை என் விரல்கள் உணர்ந்தன. அந்தக் கத்தியைப் பயன்படுத்தும் அளவுக்கு எனக்குத் தைரியம் இருக்கிறதா?

*Editorial Team :* **Jeswyn, Jesudoss, Prem, Wilbert & Mic Yell**
*Cover Photo :* **Suresh** *Design :* **Jeba Prakash** *Pages :* **36**
**For free PDF** *copy Please Contact :* **kurutholaimag@gmail.com**
*Facebook :* **@kurutholai** *For More Details :* **9442269002**
**எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன**